(*b.*) Why has he not written the deposition? Why do the peons beat the witness? The gentleman will do you justice. What fault has the physician committed? Why do these villagers not pay the instalment (due)? The child does not sleep. Although I have called the defendant's witnesses they come not. Although the munshi read the lesson to him he does not pronounce it rightly. Although his father beat him the little boy does not attend to his lessons.

Lesson 39.

Some defective and irregular verbs.

117. According to 110, from the roots மாட்டு, *hook on;* கூடு, *join;* போ, *go;* ஒண்ணு, *be possible;* ஏல், *agree;* தகு, *be fit* (δίκη); போது, *suffice;* ஒ, *agree;* வேண்டு, *need,* are made the very common forms:

Sing.	1.	மாட்டேன்,	I *will not, cannot.*
	2.	மாட்டாய்-டீர்,	thou *wilt not, can'st not.*
	3.	மாட்டான்-ர்,	he *will not, cannot.*
		மாட்டாள்,	she *will not, cannot.*
		மாட்டாது,	It *will not, cannot.*
Plur.	1.	மாட்டோம்,	We *will not, connot.*
	2.	மாட்டீர்கள்,	ye, or you *will not, cannot.*
	3.	மாட்டார்கள்,	they *will not, cannot.*

கூடாது, *It must not be.*
போகாது, *"It is no go."* (vulg.)
ஒண்ணாது, *"It won't fit."* (vulg.)
ஏலாது, *It is not proper.*
தகாது, *It is not fit, right.*
போதாது, *It is not sufficient.*
ஒவ்வாது, *It does not agree.*
வேண்டாம், *It is not necessary.* (This is quite irregular. For வேண்டாவாம். வேண்டா + ஆம். 110.)

118. The positive of கூடாது is formed regularly (3d part. neut. fut. 72.) கூடும்; of ஏலாது, ஏற்கும் (comp. 70.); of தகாது, தகும்; of ஒவ்வாது, ஒக்கும்; and of வேண்டாம், வேண்டும். These are all common.

119. *a.* இந்தத் தேனைக் கிடங்கில் வைக்கலாமா? வைக்கக் கூடாது.
May this honey be put in the store-room? *It must not.*

b. இந்தக் குதிரை பண்டியில் போகுமா? போக மாட்டாது.
Will this horse go in the bandy? *It will not.*

c. வாதி கொடுத்த மனு தகுமா? தகாது.
Is the complaint which the plaintiff has presented a fitting one? *It is not a fitting one.*

d. அவனை வைகிறது தகுமா? வைகிறது தகாது.
Is it a fit thing to abuse him? *To abuse is not becoming.*

e. பிரதிவாதி கோர்ட்டிலே ஒரு மனுக் கொடுக்க வேண்டுமா?
Should the respondent present a petition in court.
கொடுக்க வேண்டாம்.
He need not (should not, &c).

Exercise 38.

120. *(a.)* இந்தப் பையன் பாடம் படிக்க மாட்டேன் என்கிறான். ஊரார் மாகுலை அறுத்துக்கொண்டு போய் இருந்தும் கிஸ்திப்பணத்தைச் செலுத்த மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். அந்தக் கடைக்காரன் தீமைகளைச் செய்திருந்தாலும், அவனுக்கு நீர் மன்னிக்கவேண்டும். அந்தச் சங்கதியைக் குறித்து (116.) உமக்கு என்ன தெரியும்? உமக்குத் தெரிந்ததை (87.) எல்லாம் (127.) தெளிவாய்ச் சொல்லக்கூடாதா? இப்படிப் பேசுவது (88.) தகுமா? இது சரியல்ல. (43.) இது எப்படி நடந்தது? சொல்லு சரியாய் (idiom for சரியாய்ச் சொல்லு, which is more correct). நான் ஒன்றும் (172.126.=*any thing at all.)* அறியேன் என்றான்.

வேண்டாம், அப்பா! அந்தப்பணம் எனக்குப் போதாது, ஐயா! போதும், போதும்! [For *போதாது* we often hear *பற்றாது* or *பற்ற மாட்டாது* = *it won't touch* (suffice) Thus, *அந்தச் சம்பளம் வயிற்றுக்குப் பற்றாது*, *the wages won't* suffice *for my வயிறு*. This is often said by the common people.]

(b.) The watchman said that the villagers beat him; but the witnesses did not give their deposition rightly. Why will you make a disturbance in the village? Although the defendant killed the dog you must forgive his fault. They all sat down in the court. They were seated in the place of justice when the gentleman came in. This and that agree. Tell him how the affair happened. He says that he cannot learn the lesson. The servant said he would not do that. They denied all knowledge of the affair. The munshi said that I need not write that lesson.

Lesson 40.

Other parts of the negative verb.

121. (1.) An ordinary familiar imperative. To the third sing. neut. neg. add *ஏ* for the sing.; *ஏ* + *உம்* for the polite form; and *ஏ* + *உங்கள்* for the plural.

From *நடவாது*, *it walks not (does not happen).*
are formed *நடவாதே*, *don't walk,*
நடவாதேயும், *don't walk sir!*
நடவாதேயுங்கள், *don't you walk.*

(2.) The negative verb. participle (27.) is formed by adding *ஆது* or *ஆமல்* to the root. One of the forms is therefore the same as the 3d sing. neut. neg. 110.

படியாது, } *not learning.*
படியாமல், }

(3.) By adding to the above the auxiliary verb இரு (sometimes போ and other roots), in all its parts, a complete negative verb may be constructed, though the forms are rather cumbrous. Thus:

படியாமல் இருக்கிறான், } *he does not learn* (he is not learning).
படியாதிருக்கிறான், }

நடவாதிரு, *do not walk.*
நீ நடவாமலிருந்தால், *if you do not walk.*

Further examples are not necessary, but compounds of this kind are constantly used.

(4.) A negative relative participle for all tenses, and participial nouns, answering to the forms in (74. 87.), are formed by changing *உ* of the verbal participle in *ஆது* into *அ* (or sometimes, chiefly in poetry, by simply omitting *து*).

நடவாது (—உ + அ =) நடவாத, *who or which walks not.*
இவன் படியாத பையன், *he* [is] *a boy who learns not* (or has not learned).
நான் கட்டாத (62) வீடு, *a house which I have not built.*

(5.) And thence we obtain the following negative participial nouns:

Singular.	நடவாதவன்,	*he who does not walk.*
	நடவாதவள்,	*she who does not walk.*
	நடவாதது,	*that which does not walk.*
Plural.	நடவாதவர்,	*he* (hon.) *who does not walk.*
	நடவாதவர்-கள்,	*they who do not walk.*
	நடவாதவை-கள்,	*they which do not walk.*
	இல்லாதவன், =	*one who has not.*

121. VOCABULARY.

பதறு, *hurry,* (56. II.).
சிதறு, *be dispersed, come to nothing* (56. II.).
ஞானம், *wisdom.*
அஞ்ஞானம், *folly, ignorance, heathenism.*
நூல். *thread; a work on a science.*
மாற்று, *the relative value of a metal, its fineness.*
உரை, *standard of gold.*
தேம்பு, (62.) *sob.* ஓய், (57.) *cease rest.*
Neither—nor, உம்—உம் with a negative.

Exercise 39.

122. *(a.)* நீ தீமை செய்யாமல் இருந்தால் வாழுவாய். பையனே, காட்டுக்குப் போகாதே! என் பிதாவே! என்னைத் தண்டியாதிரும். குடிகளே! சண்டை செய்யாதிருங்கள்! பேசாதேயுங்கள்! நீ படியாமல் இருந்தால் (போனால்) பாடம் வராது. அவன் படிக்க மாட்டானே ஆனால் பாடம் எப்படிவரும்? (How will the lesson come? How can he understand it?) பதறாத காரியம் சிதறாது. தகாததைச் செய்பவன் [88.] படாததைப் படுவான். பாவஞ் செய்யாதிரு, மனமே! புத்தியற்ற [From அறு. 68.] அஞ்ஞான நூல் படியாதே! தான் தேடாப் பொன்னுக்கு மாற்றும் இல்லை, உரையும் இல்லை, *(what is got without effort is not valued).* விடா (254.) மழையாகப் பெய்துகொண்டிருந்தது. இவனை அறியாமல் இவன்பின்னே போய்ச் சோதித்து வாருங்கள். (Idiom: *without his knowing it.* Probably a corruption from இவன் அதை அறியாமல்.) [Many of these sentences can be rendered in various ways. *Try!*] தேம்பித் தேம்பி ஓயாமல் அழுதான். இது என்னாலே முடியாது.

(b.) I had not seen him. If he will not come. Why do not the servants open the doors? If they do not open the doors when I tell them *(நான் சொல்லும் போது)* what can I do *(என்னத்தைச் செய்யலாம்)*? If the attorney does not properly represent the affair in court *(நியாயஸ்தலத்திலே சரியாய்க் காரியத்தைப் பேசாமல் போனால்)* what can the plaintiff do? This is a thing which has not happened and cannot happen. Silence! This is an impossible thing. What is not possible to us, is possible to Him.

Lesson 41.

Some miscellaneous forms.

123. *(a.)* (70. 2.) The form *படித்தேன்*, &c., is vulgarly pronounced *படிச்சேன்*, and *படித்தது* is *படிச்சது* or *படிச்ச*. So *படித்து* is *படிச்சு*. This is not to be imitated, but in very common conversation can hardly be quite avoided. Thus போச்சது or போச்சு is used for போயினது or போனது. This is elegantly போயிற்று. So ஆயினது, ஆனது, ஆயிற்று is vulg. ஆச்சது or ஆச்சு.

(b.) The shortened செய்யா is occasionally used in composition where செய்யாமல் (121. (2.) would be the full form). This is chiefly found in the phrases இல்லா விட்டால், செய்யா விட்டால், போகா விட்டால், and the like. விட்டால் = *if* [you] *leave* (68). Thus செய்யா விட்டால், will mean, "*not doing, if* (you) *leave;*" இல்லா விட்டால் = "*not being, if* (you) *leave;*" போகாவிட்டால் = "*not going, if* (you) *leave.*" They are equivalent to "*unless you*, &c.," "*if you do not*, &c."

The full forms செய்யாமல் இருந்தால், &c., are perhaps more elegant.

(c.) For செய்தால், (95. *a.*) you will often hear செய்தாக்கா = *if you do*, போனாக்கா = *if* [you] *go*, &c. This is either from the poetical form செய்தக்கால், or from *செய்தால் கால் (ல் + க் = ற்க், செய்தாற்கால்,)* where கால் is a poetical word for காலம், *time* = *when*.

(d.) Letters are often interchanged in different parts of the Tamil country. Thus, ழ is ய in Madras, and ள in Tinevely and the south.

கோழி, a fowl, is கோயி in Madras, and கோளி in the south.

ச and ய are also interchanged.

Thus வியாதி, sickness, is in the south often விசாதி.

(e.) The 3d plural (mas. and fem.) is strangely corrupted in very vulgar conversation. Thus, செய்வார்கள் becomes செய்வாங்கோ, &c.; செய்தார்கள் is sometimes pronounced something like செய்தாவ (CHEYTHÂWA.)

(f.) There is a common form which the lower orders sometimes use in addressing a superior that is puzzling to a beginner: for இல்லே they say இல்லீங்க, &c. This seems to be the honorific plural உங்கள் added. This is carried to a great extent in Madras.

(g.) We have in English a number of words which are apparently mere reduplications, such as *hurly-burly*, *topsy-turvey*, &c. In Tamil these occur much more frequently. In general any noun may be so repeated (of course in the merest colloquial dialect). If the word does not begin with க the reduplicated syllable generally does. Thus, விறகு, *firewood*, becomes விறகு கிறகு = "firewood, &c." மேசை கீசை is "the table and its appurtenances." கட்டில் கிட்டில் for கட்டில், *a cot*. கொஞ்சம் நெஞ்சம் for கொஞ்சம், a little. This is worth noting carefully.

☞ [This whole lesson may be talked over with a munshi or other intelligent native and such forms collected. These are given as a specimen. The great matter is to know exactly what the people say. We can choose our own words and forms at leisure.]

124. VOCABULARY.

இன்னம், *yet.*
போ, *go,* added to intransitive words, gives the idea of completeness as போடு does to transitives. 106. (5.)
குறை (56. I.) *be deficient,* (56. III.) *diminish, lesson.*
தமிழ், *tamil.*
பாஷை, *a language.*

Exercise 40.

125. *(a.)* அந்த வீடு கட்டப்பட்ட பின்பு நீர் போய்ப் பார்க்க வேண்டும்; இல்லாவிட்டால் உம்முடைய குமாரன் போகவேண்டும். இவர்கள் அந்தப் பணத்தைச் செலுத்தாவிட்டால் (செலுத்தாமல் போனால், செலுத்தாதே போனால்) அவர்கள் காவலில் போடப்பட (68.) வேண்டும். இந்த வேலை செய்தாச்சு ஐயா! (செய்து *having done,* ஆயிற்று *it has become,* is accomplished (58. III.) = *the work is finished.* Very common form) என்ன! வேலை ஆச்சா? (*What, has the work become? = well, is the work finished).* Madras cook (speaks) கோயி செத்துப் போச்சு for கோழி செத்துப் போயிற்று, *the fowl is dead.* Tinevely Shâṇân speaks: இதென்ன விசாதி எண்ணு* தெரியாது (every ற pronounced with a whirr), for இது என்ன வியாதி என்று தெரியாது (*I don't know what disease this is).* சேவகா! அந்த வேலை இன்னம் ஆகவில்லையா? நீ செய்தவேலை வெகு நன்றாய் இருக்குது (Ironical). நீ இன்னம் அந்தப் பணத்தைச் செலுத்தாமல் இருக்கிறது என்ன? என்னம் ஆச்சுது, சொல்லு (*Tell me how you got on?).* காரியம் முடிஞ்சுது, for முடிந்தது (*The affair is accomplished).*

* ன்ற becomes ண்ண in common talk—thus கன்று is கண்ணு.

(b.) This work is finished. If you do this evil you will perish. Don't go! You had better not go. Put it on the table. Do you understand Tamil (*தமிழ்* or *தமிழ்ப்பாஷை)?* I understand it a little (red. form). Unless you go you cannot obtain it. If he does not send his servant for it the gentleman will not give it. If you do not hear [obey] you will perish. Should the little boy be so disobedient? (*அடங்காமல்.* 56. II).

Lesson 42.

Words denoting universality.

126. Some uses of உம், *and.*

(a.) When added to an interrogative form உம் makes an universal.

எப்பொழுது,	*when?* + உம் = எப்பொழுதும்,	*always.*
எவன்,	*who?* + உம் = எவனும்,	*every one.*
எங்கு,	*where?* + உம் = எங்கும்,	*every where.*
எப்படி,	*how?* + உம் = எப்படியும்,	*in every way, by all means.*

யாவன், *who* [Poet.] } + உம் { = யாவரும் (ன் changed to ர்), *all persons.*
யாது, *which* } + உம் { = யாதும், *every thing.*

அனைத்து, *so much* + உம் = அனைத்தும், *all* (rather unusual).

(b.) உம் is also added to மேல், பின்னே, மறுபடி and many other words used adverbially.

மேல் (= *over*) + உம் = மேலும், *moreover.*
பின்னே (= *after*) + உம் = பின்னேயும், *besides.*
மறுபடி (= *another step*) + உம் = மறுபடியும், *again.*

127. எல்லா = *all.* சகல = *all.* அனை *so much.* [Poet.]

(a.) எல்லா as an adjective is prefixed to nouns, but requires உம் to be put after the noun.

எல்லா மனிதர்களும், *all men.*
எல்லா ஸ்திரீகளும், *all women.*
எல்லா வீடுகளும், *all houses.*

(b.) எல்லாம் (எல்லா + உம்) is a neuter noun = *every thing.* It is declined after the analogy of nouns in ம், substituting அற்று for அத்து, and requires the உம் after each case.

2d Case: எல்லாவற்றையும், &c.
3d Case: எல்லாவற்றோடும், &c.

(c.) சகல is a Sanskrit word = *all.* It is used as an adjective = எல்லா. சகல மனிதர்களும், &c., *all men,* &c. It is also used as a neuter noun, சகலம், and declined regularly, like மரம் but with the addition of உம். சகலத்தையும் கண்டான், *he saw the whole, all.*

(d.) அனை makes அனைத்து (sing. neut.) *so much,* and அனைய (plu. neut.) *so many.* அனைத்தும் = *the totality,* is regularly declined. These are little used except in poetry.

(e.) எல்லா, சகல and அனை, all form nouns plural (mas. and fem.) Thus:

எல்லாரும், (+ ர் + உம் com. 87.) = *all people.*
சகலரும். (+ ர் + உம்)
அனைவரும், (+ வ் + அர் + உம்.)

These are declined by inserting the signs of the cases between the words and உம்: எல்லாரையும், சகலரையும், அனைவரையும், &c.

(f.) These forms are often put after the nominative case of the noun to which they belong: thus,

பட்டணம் எல்லாம் கலங்கிற்று, (70. 2.) *the whole town was agitated.*

ஊரார் எல்லாரும் வந்தார்கள், *all the villagers came.*

படித்தவர்கள் அனைவரையும் கூப்பிட்டான், *he called all who had learned.*

Many of the other words in 126 may be used in the same way.

(g.) Instead of எல்லாரும் and அனைவரும், எல்லோரும் and அனைவோரும், are elegantly used.

(h.) முழு, adj. = *whole.* முழுமை, = *the whole.* முழுவதும், முழுதும் = *the whole.* The last two are declined as the words in (e.). முழு requires உம் to be added to the noun to which it is prefixed.

128. *VOCABULARY.

கொற்றன்,	*a mason.*
கொல்லன்,	*a blacksmith.*
கூலி,	*hire.*
சம்பளம்,	*wages.*
வெகுமானம்,	*a present.*
சந்தோஷம்,	*joy* (used for *a present*).
அபராதம்,	*a fine.*
உலகம்,	*the world.*
உள்ள,	*which is existing* (= ὤν, οὖσα, ὄν).
திரு,	*sacred, holy.*
சபை,	*a congregation, assembly.*
திருச்சபை,	*the holy Church.*
போற்று,	*extol* (56. II.).
கொஞ்சம்,	*a little, a few.*
அரசன், இராசா,	*a king* (with or without *இ*).
கால்,	*time* (for *காலம்*).
ஒருக்காலும்,	*at any time whatever.*
தீர்,	*be removed,* 60. act, *remove* (56. III.).

Exercise 41.

129. *(a.)* Did you see all the peons? Why are all the villagers assembled together? All who had committed sin feared. You must learn all the lesson well. He wrote and sent a letter to all the servants. Why did all the carpenters leave their work? Where are all the bricklayers? Give all the blacksmiths their hire. Have all the servants received their wages? The boy who learns all the lessons well. The kings who govern all the world. The king who governs the whole world. I will fine you. He never learns.

(b.) எல்லாரும் வந்தார்கள். வீடெல்லாம் வெந்து போயிற்று. (58. IV.) (124.). உலகம் எங்கும் உள்ள திருச்சபை உம்மைப் போற்றும். வேலைக்காரர் எல்லாருக்கும் அபராதம் போட்டேன். எல்லா வேலைக் காரரிடத்திலும் அபராதம் வாங்கினார். கொற்றர் யாவரும் கூலி (50.) வாங்கிக்கொண்டார்கள். அந்த வேலைசெய்த தச்சருக்கும் கணக்கனுக்கும் சம்பளம் கொடுக்கிறபொழுது கொஞ்சம் சந்தோஷங் கொடுத்தேன். சகல ராசாக்களும் குடிகளும் சாகத்தான் வேண்டும் (58. III.) (108. *c.*). உலகத்தை எல்லாம் ஆளும் அரசன். நான் யாரும் அற்ற பாவி (*I'm a destitute wretch,* 90.) எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி, நான் இரங்க வேண்டும். "பாராயோ என்னை? முகம்பார்த்து ஒருகாலும் என் கவலை தீராயோ? பராபரமே!" (This is poetical; but understood.) தான் இல்லாத போதெல்லாம் என்னைத் தன் மந்தையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லுவான். குடும்பக் கவலை எவ்வளவும் இல்லாமையால் இவ்வளவு பெலத்துடன் [239.] இருக்கிறான். சபையாரை [180.] எல்லாம் கேட்டுப் பார்த்தும் (100.) ஒருவருஞ் சொல்லவில்லை. முழுதுங் கெட்டான். முழுவதுங் கொடாதே. அந்த நாட்டில் அனைவரும் கூடினார்கள்.

Lesson 43.

Qualifying words. Apposition.

130. It may be broadly stated that in Tamil there are no adjectives. How then are nouns qualified? [Compare 74.] The past relative participle of ஆ (58. II.) (74.) is ஆன or ஆகிய, (forms of ஆயின or ஆகின)= "having become." These inserted between any two nouns will either convert the former into something answering to an adjective, or place the two in apposition. This is common and clearly intelligible.

ஆகும், or ஆம் (72*) is used for ஆன poetically, as என்னும் (132.).

Thus: *வீரனும் அரசன், a heroic king* [*a king who will be a hero*].

செவப்பான சட்டை, a red jacket (செவப்பு, redness, செவப்பான red, or *which has become red.* You may also say, *செவப்புச் சட்டை).*

இராசாவாகிய தாவீது king David, David the king. You can say also, *தாவீது ராசா*, or *தாவீது என்னும் இராசா* (in common language *என்கிற* is used for *என்னும்*), or *தாவீது என்னப்பட்ட இராசா.*

131. From the above it appears that two nouns may often be simply joined together to form a compound, after the manner of *steam-ship, brick-house*, &c. This is constantly done in Tamil poetry, and is, doubtless, most in accordance with the genius of the language. In fact it may be laid down as a law of the language that every noun becomes an adjective by being prefixed to another noun, with or without change. [The Sanskrit Scholar may compare these forms with Tat-purusha and Karmmad'hâraya compounds.]

(a.) Sometimes this is done without any other change than the doubling of letters, as, *தீப்பொறி, a spark of fire (தீ fire, பொறி a spark). தெருத்திண்ணை, the outside pial (தெரு a street, திண்ணை, a pial).*

(b.) When the former noun ends in ம் that letter is elided.

[This is especially the case in Sanskrit compounds.]

Thus: *மரக்கொம்பு, a branch of a tree (மரம், a tree. கொம்பு, a branch). சர்வ வல்லமை, omnipotence (சர்வம், all, வல்லமை, power).*

(c.) Various changes take place in the former word, of which the following are types: [Com. 18. c. d.]

இருப்புச் சங்கிலி,	*an iron chain*	*(இரும்பு, iron. சங்கிலி, a chain).*
எருத்துக் காளை,	*a young bullock*	*(எருது, a bullock. காளை, a young male).*
ஆற்று மீன்,	*fish from the river*	*(ஆறு, a river. மீன், a fish).*
ஆட்டு மந்தை,	*a flock of sheep*	*(ஆடு, a sheep. மந்தை, a flock).*
பனங் காடு,	*a palmyra jungle*	*(பனை, a palmyra. காடு, a jungle).*

[The nasal is hardened into the surd; ட் of டு and ற் of று doubled; அம் inserted.]

(d.) இன், அத்து, அற்று are often used as connectives, and are thus used as signs of the sixth case, பசுவின் பால், *cow's milk.* இவ்விடத்து மனிதன், *a man of this place.*

☞ [The inflectional base is used in compounds, Comp. 21.]

(e.) A class of nouns of quality ending in மை (184) when prefixed to other nouns undergo certain euphonic changes. The following are chiefly to be noticed:

(1.) பெருமை, *greatness,* becomes பெரு, பெரிய, பெரும், பேர்.
(2.) சிறுமை, *littleness,* becomes சிறு, சிறிய, சிறும், சிற்று, சீறு.
(3.) அருமை, *preciousness,* becomes அரு, அரிய, அரும், ஆர்.
(4.) பசுமை, *freshness,* becomes பசு, பசிய, பசும், பச்சை, பைம்.

Examples.

பெரு நெஞ்சு, *pride* [நெஞ்சு, *breast*].
பெரிய நன்மை, *a great benefit.*
பெரும் பாவி, *a great sinner* [before க், ச், த், ப்].
பேரின்பம், *Heavenly bliss* [before a vowel].

[பெரிய may be regarded also as a kind of past relative participle. Compare அனுப்பிய 74.

பெரும் is a kind of future rel. part. (74) from பெரு (கு) 62 *grow great.*]

☞ [Of these the roots are undoubtedly பேர் (பர், பல்), சிற், (சில்), அர், பச்; but the Nannûl, with good reason, (Sût 135, 6.) treats each of them as having become first an abstract noun, and as having been variously modified, when placed as the first member of a compound by the rejection of மை, the addition of இய or உம், the lengthening of the root vowel, or the reduplication of the final root consonant. Comp. Pope's III GRAM. 121.]

132. என்னும் is the rel. part. fut. of என், *say.* (70. 1.) (74.) Lit. "[of whom] *one would say.*"

It is thus used, தாவீது என்னும் இராசா, *king David.*
மானம் என்னுங் காப்பு, *the defence of shame.*
பத்தி யென்னும் ஏணி நாட்டு, *plant the ladder of piety.*

This is rather stiff and pedantic.

133. The root உள் signifies "*existence, the having within.*" To it are referred the following verbal forms:

3d sing. for all genders and numbers. } உண்டு (உள் + து) *there is.* (43.)

உள்ளது is used to signify "*it is,*" but more generally "*it is true,*" "*it is really so.*"

Rel. part. உள்ள, *containing, possessing within itself.* [Co. 184.]

This last form added to a noun will have nearly the same effect as ஆன.

Thus: இரக்கமுள்ள தேவன் (இரக்கம், *mercy*), *a merciful God.*

Sometimes உள்ள and ஆன may be used indiscriminately.

என் பிரியமுள்ள குமாரன், }
என் பிரியமான குமாரன், } *my dear son.*

Generally, however, the difference between ஆன = "*having become,*" and உள்ள = "*having possessed,*" must be observed.

இரக்கமுள்ள பிதா, not இரக்கமான.
நீளமான கோல், not நீளமுள்ள.

The opposites to உள்ள and ஆன are அற்ற, இல்லாத, which are in the same way added to nouns:

Thus இரக்கமற்ற = *merciless.*
[அறு *cease.* 68. 74.]
பணமில்லாத = *penniless.*
[இல் = *not,* 121. a double negative.]

To Sanskrit noun, ஈன (HÎNA), *destitute of,* is added.

thus, புத்தியீன
புத்தியீனமான } மனிதன், *a senseless man.*
புத்தியீனமுள்ள
or புத்தியீனன்.

[In Tamil Grammar the 4th class of words consists of those called உரிச்சொல் = quality words. Comp. Pope's III GRAM. 118—121.

These are subdivided into பெயர் உரி = *noun quality,* and வினை உரி = *verb quality.*

The words included under these divisions are used respectively to qualify nouns and verbs; they may therefore be called *adjectives* and *adverbs.* They are however really nouns and participles, and it will tend greatly to aid the learner in acquiring the Tamil idiom if he steadily regard them as such.]

134. VOCABULARY.

மதுரம்,	*sweetness.*	கீரை,	*herb.*
கசப்பு,	*bitterness.*	பாண்டம்,	*a vessel.*
நவம்,	*newness.*	நாலு,	*four.*
எதிர்,	*opposite.*	திருடன்,	*a thief*
சிறு,	*little.*	பள்ளம்,	*a pit.*
பழக்கம்,	*custom, familiarity.*	நடு,	*middle.*
சுகம்,	*comfort, health.*	வெற்றிலை,	*betel.*
சருவ வல்லமை,	*omnipotence.*	கொடி,	*a creeping plant.*
		பலன், or பெலன்,	*strength.*

Exercise 42.

135. *(a.)* This is a joyful day. I have come to (7th case) my merciful father. This is an evil thing. He is a just king. This is a reasonable complaint. The accountant has brought a right account to the bazaar-man. Four accountants gave evidence in the court. Will the watchman put the thieves in prison? All my familiar friends came with me to the place of justice. This is David the accountant. (3 ways). This is an affair concerning the church *(திருச்சபைக் காரியம்).* A new vessel. Sweet Tamil. Are you well. This is a herb garden.

(b.) மதுரமான தேன் காட்டில் உண்டு. கசப்பான கனிகளைக் கொண்டுவந்தார்கள். சருவவல்லமையுள்ள பிதாவாய் (81.) இருக்கிற பராபரன். நவ பாண்டங்களை வாங்கிவா. அவன் சொன்னது நவமான சங்கதி. எதிர் வீட்டிலே பேசிக் கொண்டிருந்தார்கள். நாலுபேர் திருடர் ஒரு வீட்டிலே வந்தார்கள். சிறு பிள்ளைகள் இப்படிப் பேசலாமா? அவள் நடந்த சங்கதியை எல்லாம் சொன்னாள். பள்ளம் உள்ள இடத்திலே தண்ணீர் நிற்கும். (Proverb.) இராமன் என்கிற கடைக்காரன் வந்தான். நடு வழியிலே சிறுபிள்ளைகளைக் கண்டேன். பசுவின் தயிர். மனக்கவலையே பலக் குறைவுக்குக் காரணம். இது வெற்றிலைக் கொடி நடுகிறதற்கான நிலம். (Here ஆன = *which is suitable for.*) தனக்குள்ளது உலகத்துக்கும் உண்டு; தனக்கில்லது (இல் + அது = *that which is not.* 87.) உலகத்துக்கும் இல்லை என்றான். அவர்கள் வாய்மொழி கேட்டார். மேகச் சாயை, இளம்புல், தனம் இவைகள் வெகு நாளைக்கு நில்லா.

Lesson 44.

Idioms connected with ஆகிறது.

136. *(a.)* நாங்கள் நாலு பெயரும் ஆக வந்தால்,
[We four persons, to become, if come]
= *If we four persons come together.*

(b.) ஆக is used in summing up = *all altogether.*
நான் கொடுத்தது நாலு, அவர் கொடுத்தது ஐந்து, ஆக ஒன்பது.
That which I gave (is) *four, that which he gave* (is) *five, making altogether nine.*

(c.) பத்திரமாகப் புதைத்து வை, *bury it carefully.* Here ஆக = ly, added to a noun, converts it into an adverb. (140.)

(d.) அவர் என்னை வரச் சொன்னதாக நினைத்தேன், *I thought he told me to come* [சொன்னது, ஆக, *as though it said.* சொன்னதாய் is also used. ஆய் = *as if.*]

137. *a.* கணக்கன் இருக்கிறான், *an accountant is.*
b. கணக்கனாயிருக்கிறான், *he is an accountant.*
c. கணக்கன் இருக்கிறானா, *is the accountant (there)?* இல்லை, *he is not.*
d. கணக்கனாயிருக்கிறானா, *is he an accountant?* அல்ல, *he is not.*

☞ ஆய், added to a noun shews it to be the predicate. (81.)

THIS IS OF THE UTMOST IMPORTANCE. Carefully consider the above examples.

138. VOCABULARY.

பட்டணம்,	*a town.*	தவலை,	*a large brass vessel.*
கிழவன்,	*an old man.*	முத்திரை,	*a seal.*
கிழவி,	*an old woman.*	பத்திரம்,	*care.*
இறங்கு,	*go down to, descend, alight* (62.)	ஐந்து,	*five.*
		ஒன்பது,	*nine.*
திருடு,	*steal* (56. II.)	வை,	*place, put* (56. III.)
பொது,	*that which is common.*	வரை,	*limit.* (வரைக்கும் 4th case + உம் = *until.*)
உடைமை,	*possessions.*		
பொருள்,	*substance, wealth,*	புதை,	*bury* (56. III.).
சாமான்,	*goods, utensils.*	சாப்பிடு,	*eat* (68.)

Exercise 43.

139. *(a.)* நாலு பேர் திருடர் ஒரு பட்டணத்தில் ஒரு கிழவியின் வீட்டிலே இறங்கித், தாங்கள் திருடிப் பொதுவில் (in common) வைத்திருந்த [79. (2).] உடைமைகளையும் பணங்களையும் ஒரு தவலையிலே போட்டு, (68.) மேலே மூத்திரை (50.) இட்டு, (68); "நாங்கள் நாலுபேரும் ஆக வந்து, கேட்கும்போது (106.) இதைக் கொடு, அதுவரைக்கும் பத்திரமாகப் புதைத்து வை" என்று கொடுத்துச், சில நாள் (50.) அவள் (50.) வீட்டிலே சாப்பட்டுக் கொண்டிருந்தார்கள். [106. (4).] இராசா சீக்கிரமாய் வருகிறதாகச் சொன்னான். நானும் நீயுமாகப் போவோம், வா! அநேக நாளாய்ச் சாமான் வரவில்லை.

(b.) Here are 5 and there 4: total 9. If he and you together go to the old man's house, he will give you the goods. Put it carefully in the house. He has great wealth which he has carefully buried in the garden. At which house has he alighted? When we obtained the goods which he had carefully sent by the peon we put them into the store-room. Is this honey? No, it is bitter. Did he eat this sweet honey? Is there honey there? No. Did he speak as if the Muhammedan would come? I have not seen the old man for many days.

Lesson 45.

Optative and desiderative forms.

140. *a.* *இது குழியில் விழக் கடவது, let this fall into the pit!*
b. *நீ வாழ்வாயாக, may'st thou prosper!*
c. *நீர் வாழ்க, may you prosper.*
d. *போகட்டும், let it go!*
e. *நாம் எழுதி அனுப்பின கட்டளையின்படி நீர் நடக்கவும், act according to the order I have sent you.*

(a.) The defective root கட *"ought, must"* is regularly declined, thus:

நான் [செய்யக்] கடவேன், *I ought* or *must* [do].
நீ [செய்யக்] கடவாய், *thou oughtest* or *must* [do].

It is added to the infinitive of any verb to form a kind of optative mood.

(b.) ஆக, like the Hebrew ָה [comp. Nordheimer's Hebrew Grammar, § 204—206] added to the future of any verb forms an optative mood. The neuter participial noun future is used for the 3d person future.

செய்வேன், I will do. செய்வேனாக, may I do! I much wish to do!
செய்வான், he will do. செய்வானாக, may he do! I long for him to do!
நடப்பதாக, may it take place.

This seems to be a strong breathing merely, expressive of desire ; but it is explained by the Grammarians as the inf. of ஆகு. 41. It is pronounced ÂHA.

(c.) க like ஆக forms an optative mood, but it is added to the root of a verb, is the same for all numbers and persons, and is chiefly used in poetry.

நான் போக, let me go! நீர் கேட்க, may you hear!

(d.) Is an unauthorized, but very common form. It consists in the addition of அட்டும், or அட்டு, to the root, inserting க்க when the present takes க்கிறு. The form is abbreviated by casting away the final vowel of the root. It is the same for all numbers and persons.

நான் } செய்யட்டும், { *let me do!* நான் செய்யட்டா, *may I do it?*
அவன் } { *he may do!*

This is said to be a corruption of ஒட்டும் = *permit*, from ஒட்டு.

141. VOCABULARY.

அ,	privitive.
அநியாயம்,	*injustice.*
புரம்,	*a town.*
துன் or துர்,	a prefix = *evil, bad.*
மார்க்கம்,	*a way.*
மார்க்கன்,	*one who walks in a way.*
புத்தி,	*sense.*
மந்திரி,	*a counsellor, prime minister.*
இராசரீகம்,	*king rule.*
மிகுந்த,	*much, very.*
(மிகு,	*be abundant* [60. (III.)] past. rel. part = *which has abounded.)*
மிகுதி,	*abundance.*
மிகுதியான,	(30.) *abundant.*
புத்திசாலி,	*a sensible person.* [The termination சாலி = S. sâlin. *one who possesses,* is often used.]
தீர்க்கம்,	*length* (pronounced dîrkkam *in the compounds).*
தீர்க்காயுசு,	*long-life* (ஆயிசு or ஆயுசு, *age, life).*
தீர்க்கதரிசி,	*a prophet, a seer* (தரிசி, *one who sees).*
போல்,	*as* (போல, போலே).
சித்தி	(56. III,) *prosper.*

Exercise 44.

142. *(a.)* அவன் அப்படிச் செய்தானே ஆனால், அழிந்து போகக் கடவான். நீ மிகுந்த புத்திசாலி ஆனதால், தீர்க்காயுசு உள்ளவனாக சுகத்தோடு வாழ்க! தீர்க்கதரிசி இராசாவினிடத்தில் என் வசனத்தைக் கேட்பீராக என்றார். கொலை செய்யாதிருப்பாயாக! (121.) இந்த அநியாயத் தீர்ப்பைப் பண்ணினவன் வாயிலே மண் விழுவது போலே இது குழியிலே விழக்கடவது. என் உயிர் போனாலும் போகட்டும். உம்முடைய இராச்சியம் வருவதாக. அநியாயபுரம் என்ற பட்டணத்திலே துன்மார்க்கன் என்கிற இராசா துர்ப்புத்தி என்கிற மந்திரியை வைத்துக் கொண்டு இராசரீகம் பண்ணினார். புத்தியுள்ளவர்களுக்குச் சித்தியாத தொன்றில்லை என்றறிக. வழியே ஏகுக, வழியே மீளுக [(Poet.), *no bye paths.*] தைரியசாலி வந்தான்.

(b.) Say not so. Pray do not say so. I beg you to do this. If I have destroyed his house may I myself perish. There is much honey in the town. Let the unjust man perish! He who commits injustice will not prosper. Although I perish I will not do injustice. May I walk sensibly! He is a very sensible person. Let him do as his counsellors said. May my affairs prosper! It won't answer. Hail, O king!

Lesson 46.

Verbal nouns in கை.

143. By adding கை to verbal roots which take கிறு in the present, and க்கை to those which take க்கிறு, a verbal noun is formed, nearly equivalent to the English verbal noun in ING.

செய்—— செய்கை, *the doing = a deed.*
நட —— நடக்கை, *the walking = a line of conduct.*

144. Some of the above are in common use as nouns; but more generally they are used to form an absolute case, like the ablative absolute in Latin, or the gen. abs. in Greek.

அவன் அப்படிச் சொல்லுகையில், *while he was saying so.*

145. ஆகையால் (ஆ) = *by the becoming: therefore.*

146. VOCABULARY.

திண்ணை,	*a pial, elevated seat in front of a house.*	ஆகாரம்,	*food, what is received into the body.*
இரண்டு,	*two.*	அப்பம்,	*rice cakes, bread.*
எடு,	*lift up, take up* (56. III.)	உரொட்டி,	*bread, a loaf.*
எடுத்துப்போடு,	*take away.*	சீதேவி,	*the goddess of prosperity.*
சாப்பாடு,	*food.*	உதை,	*kick* (56. III.).
போசனம்,	*food, nourishment.*	தள்ளு,	*turn away* (56. II.).
அன்னம்,	*food,* chiefly *boiled rice.*	சாதம்,	*boiled rice.*

Exercise 45.

147. *(a.)* ஒரு நாள் அந்த நாலு பேரும் எதிர் வீட்டுத் திண்ணையில் (131. c.) பேசிக் கொண்டிருக்கையில். அவர்கள் எல்லாரும் வழியிலே போகையில் இரண்டு திருடரைக் கண்டார்கள். அதை எடுத்துப் போடலாமா என்று கேட்டேன், இருக்கட்டும் என்றார். அநேகர் வீணாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் நீ பேசாமல் இருக்கக் கடவாய். அவர்கள் அவன் வீட்டிலே சாதம் சாப்படுகையில் நான் வந்துவிட்டேன். தானாக வந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளலாமா? உரொட்டி இல்லையா? எனக்குச் சாப்பாடில்லை. எல்லாரோடுங் கலகம் பண்ணிக்கொண்டிக் கையால்.

(b.) While the bazaar-man came running *(ஓடிவருகையில்)* the thief, knowing that, came down from the tree. Give me the loaf. Give us bread. While there are rice-cakes there is enough for us. While the mother was gone to procure food the child died. While the five men were sleeping in the verandah of the house the peons came. May I go while he is learning his lesson? While all are working is it right for you to be idle?

Lesson 47.

Verbal nouns in அல், &c.

148. Verbal nouns are also formed by adding அல், தல், கல், குதல், or க்கல், த்தல், or க்குதல் to the root.

(a.) Verbs which take கிறு in the present, take அல், தல்.

செய் —— செய்யல், செய்தல், a doing.
அடங்கு —— அடங்கல், அடங்குதல், a submitting.

The few cases where கல் or குதல் is apparently added may be thus explained: there was a root in கு, now obsolete, to which அல் or தல் was added: thus,

போ (போகு) —— போகல், போதல், போகுதல்.
ஆ (ஆகு) —— ஆகல், ஆகுதல், ஆதல்.

(b.) Verbs which take க்கிறு in the present, take த்தல், க்கல், க்குதல்.

உதை —— உதைத்தல், உதைக்குதல், a kicking.
நட —————— நடக்குதல், a walking.

149. Vocabulary.

மோர்,	*butter milk.*	*படி,*	*measure, manner* (added to relative participles = *as).*
தோண்டி,	*an earthen pot.*	*ஏவல்,*	*a command ஏவு, (stir up,* 56. II.).
எளிது,	*that which is easy.*		
அரிது,	*that which is hard.*		

☞ *அவன் ஆலோசிக்கல் ஆனான்.*
He began to consider.
[He a studying became.
He fell a thinking.
This idiom, though poetical, is sometimes heard in common conversation.]

Exercise 46.

150. *(a.)* "*மோர் வாங்குதற்கு* (4th case = *in order to*) *அந்தக் கிழவி வீட்டிலே போய்த் தோண்டி எடுத்துக் கொண்டு வா*" *என்று அனுப்பினார் கள்.* "*சொல்லுதல் எல்லாருக்கும் எளிது; சொல்லிய* [70. (I.) for *சொன்ன*] *படி செய்யல் அரிதாம்.*" "*என் செயலாவது* [*ஆ.* 87.] *யாதொன்றும்* [*யாது + ஒன்று + உம்,* 47. 172. 126. *any one thing whatsoever*] *இல்லை; இனித் தெய்வமே, எல்லாம் உன் செயல் என்று உணர்ந்தேன்.*" (Poet.) *அப்போது சொல்லுகிற சங்கதியும் தெரியலாம். ஏறுதற்கும்*

இறங்குதற்கும் தடையாய் இருக்கிறது. அந்த வீட்டிலே ஆடலும் பாடலு மாய் இருக்கிறது. [Comp. 40. Any number of nouns may thus be united together by உம்; and ஆய் added to the last converts the whole into an adverbial clause.] அவன் எவற்படி செய்யாதே.

(b.) It is easy to send the watchman to buy milk. While he commanded I submitted. This is the king's command. It is difficult to walk thus. The submitting to the command of the judge is easy. The having pity is easy. May you kick the earthen pot? Is it hard for boys to learn their lessons? Is it not easy to read a book while walking?

Lesson 48.

151. *(a.)* Particles used instead of, or in addition to, the proper terminations of cases.

ஆனவன், ஆனவள், ஆனது, ஆனவர், ஆனவர்கள், ஆனவை.
என்பவன், என்பவள், என்பது, என்பவர், என்பவர்கள், என்பவை.

The participial nouns from the roots என் and ஆ are sometimes used to point out, and throw emphasis on the nominative case. ஆகிறவன், என்கிற வன், &c. are also used in very common talk. [87. 88.]

These answer in some degree to the Greek article.

(b.) ஆர், மார் are added to nouns honorifically.

தாய், *a mother,* but தாயார், is more respectful.
உபதேசி, *a teacher,*—உபதேசியார்.
மார் is plural, கள் may be added.
தகப்பன்மார், *the fathers* (தகப்பன்).
குருக்கள்மார், *the spiritual guides* (குரு).
உவாத்திமார், *the school-masters* (உபாத்தி).

(c.) An honorific form is made also by adding இர் to certain words: of these தேவரீர், *Thou, O God,* is common.

(d.) உடன், *together with;* கிட்ட, *near;* அண்டை, *by the side of;* இன், signifying *connexion* (இனம்), are used as casal terminations. அண்டை is often redundant: தென் அண்டைப்பக்கம், *on the south side.*

(e.) "*Trees, beasts, &c.,*" = மரங்கள், மிருகங்கள் முதலியவைகள். *Selling, buying, and other affairs.*" = கொடுக்கல் வாங்கல் முதலான காரியங்கள்.

"*Call the carpenter, bricklayer, &c.*" = தச்சன் கொற்றன் முதலானவர்களைக் கூப்பிடு.

"*Food, clothes, &c.*"=அன்ன வஸ்திராதிகள். (ஆதி is the Sanskrit for முதல்.) The words are formed into a Sanskrit compound with the Tamil termination கள்.

☞ முதலியவைகள், } neuter, } are added to nouns in the nominative sing. or plural, and are then equivalent to "&c." முதல், "first."—முதலியவைகள் as if a part. noun from root முதலு (87. b.); முதலானவைகள் (முதல் + ஆனவைகள்), *those things which have become.*
முதலானவைகள், }
முதலானவர்கள், m. and fem.

முதலான followed by a noun common to all the particulars intended to be included may be used: *முதலான காரியங்கள்.*

முதலியவைகள், &c. (and in the last case *காரியங்கள்*, &c.) may be in any case; but the particulars enumerated remain in the nominative.

(f.) இடத்து is used for இடத்தில் (7th case): *எவ்விடத்தும்* for *எவ்விடத்திலும்*, *every where.*

152. VOCABULARY.

அதிக,	*much, more.*	மகிழ்,	(56. I.) *exult.*
மேரு,	*Mount Mêru.*	எட்டி,	*the strychnos tree.*
துரும்பு,	*a straw.*	இலவு,	*the silk cotton tree.*
மனைவி,	*a house-wife.*	தீ,	*fire.*
காப்பாற்று,	*protect* (56.II.) [Co. ஆற்று.]	தீப்படு,	(56. II.) *be burned.*
கடவுள்,	*Deity.*	சீஷன்,	*a disciple.*

Exercise 47.

153. *(a.)* அதிக சந்தோஷத்துடனே சீக்கிரமாய்த் தோண்டித் தவலையை எடுத்துக்கொண்டு போனான். தேவரீர் மேருவைத் துரும்பாகச் செய்வீர், துரும்பை மேருவாகச் செய்வீர். (136. d). அவன் மனைவிமார் இரண்டு பேர்மாத்திரம் அங்கே இருந்தார்கள். கடவுளானவர் எவ்வளவுங் குற்றம் வராமல் என்னைக் காப்பாற்றுவார். 121. [(2.)] Translate, *so that it shall not come.* துன்மார்க்கர்கள் கூட்டத்தில் மகிழ்ந்து சேராதே! எட்டியுடன் சேர்ந்த இலவுந் தீப்பட்டது. அந்த ஊரான் அந்தக் கொல்லையில் அவரை, துவரை, உழுந்து, எள்ளு, கொள்ளு, சாமை, தினை, வரகு, கம்பு, கேழ்வரகு, சோளம் முதலானவைகளைப் பயிர் செய்து வந்தான். கொடுக்கல் வாங்கல் (used for *business in general*), முதலான காரியங்களில் தப்பக் கூடாது. என் கிட்ட வராதே. இதின் கருத்து என்ன? கிட்டவா.

"ஆசாரம் இல்லா அசடருடன் கூடி
பாசாங்கு பேசிப் பதி இழந்து கெட்டேனே!"

(b.) He came with his wife, children, servants, &c. This is my mother. Thou, O God, art our Father. The spiritual guides came with their disciples. Come not near me. He is just in all his dealings *(கொடுக்கல் வாங்கல் முதலான).* Come to the north side *(வடவண்டைப் பக்கம்).* What is the name of this tree *(இன்)?* Near mount Mêru is a sea. On the south side of the strychnos tree is a silk cotton tree. The next house caught fire *(அண்டைவீடு).* The king with his counsellors and others came to the town. [Compare 233-251.]

Lesson 49.

Negative verbal noun in ஆமை.

154. A negative verbal noun is formed by adding ஆமை to the root (or, more precisely, by adding மை = *ness*, *ty*, [184. *a.*] to the abbreviated form of the neg. verb. part. 121. (4): *செய்யா + மை.)*

> *செய்யாமை, the not doing.*
> *நடவாமை, the not walking.*
> *இல்லாமை, the not existing.* (Double negative.)
> *படியாமை, the not learning.*
> *அல்லாமை, the not being so.*

[*மை* is added to the present (and less frequently to the past) relative participle to form an affirmative noun corresponding to this: thus, *செய்கின்ற* (not *செய்கிற) + மை = செய்கின்றமை, the doing. படித்த + மை = படித்தமை, the having learned.* This is little used.]

155. Vocabulary.

பொறாமை, envy, (பொறு, endure).
சக்களத்தி, one of several wives, a rival.
பழி, guilt, blood-guiltiness.
கூவு, call out (56. II.).
நன்று, it is good, a good thing (நல்+து).
பூ, flower, bloom (56. III.); also, as a noun, *a flower.*
சத்தியம், truth, an oath.
சிந்தை, thought.
திறம், ability.

Exercise 48.

156. *(a.)* அவனைக் காணாமையாலே போய்விட்டார்கள். அன்னம் இல்லாமையால் இவ்விடத்திற்கு வந்தேன். எப்பொழுதும் தீமை செய்யாமை நன்று [rather high]. தன் பிள்ளையைச் சக்களத்தி பொறாமையினாலே கொன்றாள் என்று பழிபோட்டுக் கூவி, அழுதுகொண்டு, பிரியாது செய்யப் போனாள். பூத்தலில் பூவாமை நன்று. வேறே சாட்சி இல்லாமையால் *(because there is no)* சத்தியம் பண்ணுங்கள். அவன் மனம் அறிந்து *(mind knowing=wilfully)* செய்ததல்லாமையினாலே நியாயாதிபதி அவனைத் தண்டியாமல் விட்டு விட்டார். இல்லாத காரியத்தை இச்சித்து, சிந்தை வழி (சிந்தையினுடைய வழியிலே) செல்லாமை நல்லோருடைய திறம்.

(b.) Why do you envy him? How can this guilt be removed? They have submitted because they had no money. I suffer much because I have no food. Because there were no witnesses the gentleman sent the complainant away. Why did the rival wife kill the little child? I climbed the tree to look for grass. He came down from the tree because there was no grass on it. Do you think it is good not to talk? You will die from not eating bread, rice and other food.

Lesson 50.

Purpose, intention.

157. It may be useful to the learner to compare the variety of ways in which an English phrase may be rendered in Tamil. Take the sentence, "man eats to live."

(a.) மனிதன் பிழைக்கச் சாப்பிடுகிறான். Literal, but not very clear. The inf. governed by the following verb:

(b.) மனிதன் { பிழைக்கும் படி / ——— படியாக(ச்) / ——— படிக்கு(ச்) } சாப்பிடுகிறான்.

Lit. { *the step that* / *as the step that* / *to the step that* } = *in order to, that he may.*

The use of படி, படியாக, படிக்கு is perfectly idiomatic.

(c.) மனிதன் பிழைக்கத்தக்கதாகச் சாப்பிடுகிறான். Lit. "*as a thing that is fit for him to live*" = *that he may.*

[R. தகு, (68.) *be fitting* defective but reg.).

Pre. தக்கேன், Rel. part. தக்க, part. noun தக்கவன், தக்கவள், தக்கது, &c.]

This use of தக்கதாக is not inelegant.

(d.) மனிதன் { பிழைக்கிறதற்கு(ச்) / பிழைப்பதற்கு(ச்) / பிழைக்கிறதற்காக(ச்) / பிழைப்பதற்காக(ச்) } சாப்பிடுகிறான். { The part. noun. neut. sing. pres. and fut. in the 4th case. }

The future forms are esteemed more highly than the other.

(e.) மனிதன் பிழைக்கும் பொருட்டுச் சாப்பிடுகிறான் = *for the purpose of living* (rather high).

[பொருட்டு from பொருள் (+து. 184. *b.* ள் + த் = ட்ட) *substance=that which has the property of.*]

(f.) மனிதன் பிழைக்க வேண்டும் என்று சாப்பிடுகிறான். Lit. "*saying, it is necessary to live*" (colloquial).

(g.) மனிதன் பிழைத்தலின் நிமித்தம் சாப்பிடுகிறான் = "*for the sake of living*" (somewhat stiff).

[நிமித்தம், *cause*, is used. absolutely, alone or with ஆய் or ஆக added to it, in the sense of, "*for the sake of.*"]

(h.) எனக்குக் குறைவு வராமல் இப்படிச் செய்தேன், *I did this that no deficiency might arise to me* (வராதபடிக்கு).

All these forms will often occur in books and in common conversation. They illustrate idioms with which the learner must take great pains to familiarize himself.

158. VOCABULARY.

உள்ளே, *inside.*
ஓட்டம், *a rapid course.*
ஓட்டம்பிடி, *take to flight, gallop off* (பிடி, *seize.* 56. III.).
மூன்று, *three.*
நாழிகை, *a Tamil hour* = 24 minutes.
ஒரு மணிநேரம், *an English hour* (ஒரு, *one;* மணி, *bell;* நேரம், *time*).
ஒரு தாசு, *an hour* (தாசு is *a gurry* on which hours are struck).
நியாயாதிபதி, *a judge* (நியாயம், *right;* அதிபதி, *a ruler:* a Sanskrit compound).
தீர்ப்பு, *a decision.*
படி, *according to.*
மாத்திரம், *only.*
பிரார்த்தி, (56. III.), *pray, beseech.*
இஷ்டம், *pleasure, desire.*
பங்கு, *a part.*
பஞ்சு, *cotton.*
வர்த்தகம், *traffic.*
மூட்டை, *a bundle.*
எலி, *a rat.*
வளர், (56. III.) *bring up.*
ருசு or உருசு, *proof* (H. Ruju.).
உருசுவாக்கு, உருசுப்படுத்து, (56. II.) *prove.*
உருசுகொடு, (56. III.) *give proof.*
திருஷ்டாந்தம், *an example.*

Exercise 49.

159. *(a.)* அந்த உடைமையைக் கிழவி கொடுக்கும்படியாகத் தீர்ப்புச் செய்தான். உங்கள் வாக்கு மூலப்படியே (properly) வாக்குமூலத்தின் படியே) நீங்கள் மூன்றுபேர் மாத்திரம் கேட்டால் கொடுக்கக் கூடாது; நாலுபேரும் வந்து கேட்டால் உங்கள் பொருளை அவள் கொடுக்கவேண்டும் என்று தீர்ப்புச் செய்வேன். இதை விட்டுவிடச் சொல்லாதிருக்கும்படி உம்மைப் பிரார்த்திக்கிறேன். உன் இஷ்டப்படி செய் (இஷ்டத்தின்படி). ஊர் எல்லாம் அறியும்படியாகக் கூவினாள். நாலுபேர் பங்காகப் (136.) பஞ்சு வர்த்தகம் பண்ணினார்கள். பஞ்சு மூட்டைகளை எலிகள் கடியாதிருக்கும்பொருட்டு அவர்கள் ஒரு பூனையை வளர்த்தார்கள். இது என்னுடைய மாடு என்று உருசு கொடுக்கிறதற்கு ஒரு திருஷ்டாந்தஞ் சொல்லுகிறேன். தன் பெண்சாதியை அழைத்துக்கொண்டு வருகிறநிமித்தம் மாமியார் வீட்டுக்குப் போனான். என் வல்லமையை அறிதற்பொருட்டு இப்படிச் செய்தார். அண்ணே! நான் கன்றுக்குட்டிக்குப் புல்லுப் பிடுங்க ஏறினேன், என்றான்.

(b.) How can you prove this? What example have you to afford evidence that this house is yours? He went to fetch his wife. I beseech you to do me justice. He trafficks to obtain profit. He gives an example to prove his case. You must act only according to rule. Do as you please. I will give you a reason why you should learn diligently. Prove clearly before the magistrate that this house is your father's. From the absence of proof and examples the house will be taken from you and given to the merchant. The cat runs to catch the rat. Will not the rat run to escape the cat? What is this for? I obtained this money by his means. [242.]

Lesson 51.

Causal verbs and transitive verbs in general.

160. The following examples will render explanations and rules unnecessary. These forms are generally to be found in the dictionary. They may be divided into two classes:

I. Forms indicating that *the person causes another to perform the action of the verb.*

(a.) From root அழை, call (56. III. where the present takes க்கிற), is formed அழைப்பி, *cause to call* (56. III.). Here பி is added and ப் doubled.

அரசன் என்னை அழைப்பித்துக் கேட்டான் = *the king sent for me and asked.*

(b.) From root செய், *do* (56. I. where the present has கிற), is formed செய்வி, *cause to do* (56. III.). Here வி is added to form the causal root.

ஒரு கப்பலைச் செய்வித்தான் = *he caused a ship to be built.*

(c.) From root என், *say* (82), is formed என்பி (56. III.), *cause to say, prove;* root காண், *see* (70.), காண்பி = காட்டு (காண் + து) *cause to see, show.*

From உண், *eat* [56. (III.)] is formed உண்பி, *feed.*

From கல், *learn* (70) is formed கற்பி, *teach.*

Here பி is added. There are many other forms of this kind in common use.

II. Simple transitives formed from intransitive roots.

(d.) From root நட, *walk* (57. I.) is formed நடத்து, *cause to walk, lead* (56. II.). There are few of these, and chiefly from roots in அ and உ.

[The root நட, has also a causal நடப்பி, according to *(a).* (56. III.)]

(e.) From root ஏறு, *ascend* (56.) II.), is formed ஏற்று, *cause to ascend, lift* (56. II.) (com.). To ஏற்று and other transitive forms வி may be added to form a causal.

☞ [In this and the following forms the causal strengthens the root by doubling the consonant, or by hardening a nasal.]

(f.) From root ஓடு, *run* (56. II.) is formed ஓட்டு, *cause to run drive* (56. II.) (com.).

[In Ind. I. comp. சாடு, சாட்டு; வாடு, வாட்டு, &c. &c.]

(g.) From root அகறு, *be removed* (70.) is formed அகற்று, *remove, put away,* (62.)
——— உருளு, *roll* [56. (III.)] ——— உருட்டு, *roll* over. (62.)

(h.) From root அடங்கு, *submit* (56. II.), is formed அடக்கு, *put under, cause to submit* (56. II.). [In Ind. I. comp. நீங்கு, நீக்கு.]

(i.) From பெருகு, *grow, increase* (62) is formed பெருக்கு (62), *multiply.*
[In Ind. I. comp. ஆகு, ஆக்கு; சறுகு, சறுக்கு, &c. &c.]

(j.) From root திரும்பு, *turn one's self* (56. II.), is formed திருப்பு, *turn another, cause to turn* (56. II.).

[In Ind. I. comp. *கிளம்பு, கிளப்பு; நிரம்பு, நிரப்பு; எழும்பு, எழுப்பு; குழம்பு, குழப்பு; கூம்பு, கூப்பு*, &c. &c.]

(k.) From root *காய், become dry* (56. I.), is formed *காய்ச்சு, boil, make dry by heat* (56. II.). There are very few of these forms.

(l.) Many roots may follow (56. I.) and are then intransitive; or (56. III.) and are then transitive. (Compare 15. g.).

[In Index I. compare *தொடுகிறது, தொடுக்கிறது; இழிகிறது, இழிக்கிறது*, &c. &c.]

☞ [An intransitive verb in the *நன்னூல்* is called *தன்-வினை = own-action*, and a transitive verb, *பிற-வினை, another-action*. These terms are taken from the parasmai-padam and âtmanê padam of the Sanskrit; but the classes of verbs are far from corresponding. Comp. Pope's III Gram. 100-106.]

161. Vocabulary.

இட,	*be lying down*, 56. (I.).	படு,	*suffer*, 56 (II.).
இடத்து,	*(c.) lay down, place in a recumbent position.*	படுத்து,	*inflict upon, cause to suffer.*

☞ [The two last mentioned verbs are added to nouns to form intransitive and transitive verbs respectively: thus, *சந்தோஷம், joy; சந்தோஷப்படு, rejoice; சந்தோஷப்படுத்து, make glad.*]

செல்(லு,) go, pass (56. III.). *செலுத்து*, (56. II.) *cause to go, pay, discharge.* இரு, *be* (60. II.). இருத்து (56. II.), *place, cause to be.* குழந்தை, *an infant.* ஆச்சரியம், *astonishment.* சமீபம், *nearness.* மாறு, *other, different.* வேஷம், *disguise, appearance.* அறிவி, *make known (அறி + வி).*

Exercise 50.

162. *(a.)* அவன் சிறு குழந்தையைக் கொண்டுவந்து, என் பக்கத்திலே கிடத்தி விட்டுப் போனான். அவனுடைய தகப்பன் தனக்குள்ளே ஆச்சரியப்பட்டு, மாறு வேஷங்கொண்டு, நியாயஸ்தலத்துக்குச் சமீபத்திலே வந்திருந்தான். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் (ஆகும் = ஆவான். *Poet.*) நான் சொன்னபடி கேட்டுக் கொண்டிருந்தால் உனக்கே பட்டமுங் கட்டுவித்து, விவாகமுஞ் செய்விக்கிறேன். பால் காய்ச்சு. எழும்பு நீ! அவனை எழுப்பு. அந்தக் கல்லை உருட்டிப்போடு.

"பசுவின் பாலை வற்றக் காய்ச்சினாலும் தன் சுவை குறைபடாது."

(b.) They brought a little infant and laid it before me. The physician led the mother to the house. The gentleman caused the watchman to be called. Why have you caused the merchant to be sent for? Turn the bandy round. Put that man down. Lift that bundle. Put that bundle upon the bandy. Boil that conjee for the infant. Drive the bullocks. They lifted up the child upon the horse. The rats are astonished to see the cats. The cats rejoice to see the rats. Did you boil the milk? Will you lift the cotton-bales? Don't drive the bandy.

213. (*a.*) கூடினமட்டும் பிரயாசப்படு (com.). இதுகளை நான் வரும் அளவும் காப்பாற்றி வை. என்னால் ஆகிற வரைக்கும். "ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு." எலுமிச்சங்காய் அத்தனை சாதம் போட்டாள். நெல்லையாகிலும் கொடு, இல்லாவிட்டால் ஒருமாதம் வரைக்கும் அவன் போடுகிற சாதத்தை ஆகிலும் சாப்பிட்டுக் கொண்டிரு. போகக் கூடாதென்று வேண்டிய மட்டுக்கும் சொன்னாள். நான் எவ்வளவு? இப்பஞ்சையின் மேல் இப்படியாக வரலாமா? பத்து வயது முதலாக முப்பது வரைக்கும் தர்க்க சாஸ்திரம் ஒன்றையே கற்றுக்கொண்டான். அந்த மட்டுக்கும் ஏற்றம் நிற்குமோ எப்படி? என்றான். அந்தமட்டும் நான் ஏறி மிதிக்கிறேன் என்றார். தாய் வரும் அளவும் பேச்சிழுத்தாள். அதற்களவில்லை. இவ்வளவென்றில்லை. நேற்றை அளவிலே செய்தி இப்படி. இற்றைவரைக்கும்.

(b.) As long as we all live we must labour patiently and diligently. I will not yield a jot of what I claim. He was up to the chin in water. Thus much I have borne. At least take up this little burden. Be thou faithful unto death! It is as large as a lime. I will wait till to-morrow. I will do what I can. From the time the learned man came until now I have been thinking about the matter. His wisdom is immeasurable. Until to day.

Lesson 67.

214. ஏன், *why?*
    என்ன, *what?* (Less. 13.) Poet. என்னே?

a. ஏன் வந்தாய்? *Why did you come?* [vulg. எங்கே வந்தாய்?]

These words are sometimes used in a manner that may perplex the learner.

b. இப்படிச் செய்வானேன்? *Why does he* (any one) *do this?*
இப்படிச் செய்வதேன்? *Why do this?*

c. அதேனெனில், அதேனென்றால், } [அது, ஏன், என்றால்,] *if you say why = wherefore.*
(Many similar forms are in use.)

d. நீ இப்படிச் செய்கிறதென்ன? *Why do you do thus?*

e. ஏனும் = *soever.* [This may be, ஏன் + உம், or a corruption of ஆயினும்.] It is equivalent to ஆகிலும், in such forms as, எவ்வளவேனும் (எ, அளவு, ஏனும்) *how much soever.* 212. d.

f. இருக்கதென்ன? போவென்ன? = இருந்தால் என்ன? போனால் என்ன? *What matters it whether (they) remain, or go? live or die?*

This is common, and yet strictly classical.

g. என்பேரில் இரங்கும் ஏன்! *Pray have mercy upon me!*

Here ஏன் = *pray do,* is either for ஏ emphatic, or from ஏன் = *why not?*

215. Vocabulary.

ஓய்,	*cease.* (56. I.)	பாய்	(56. I.), *rush.*
நிந்தி,	*revile.* (56. III.)	வண்டில்,	*a bandy.*
சதி,	*deceit.*	மச்சான் (மைத்துனன், மச்சனன்), *a brother-in-law.*	
சாஸ்திரம்,	*science.*	உறவு,	*relationship.*
ஆராய்,	*search into* (56. I.).	உறவாடு (56. II.),	*claim relationship.*
அண்டு,	*draw near* (56. II.).	காளை,	*a bullock.*
ஆநந்தம்,	*felicity.*	அக்காள்,	*an elder sister.*
வெள்ளம்,	*a flood.*		

Exercise 66.

216. *(a.)* ஓயாமற் பொய் சொல்லுகிறவர்களும், நல்லோரை (184.) நிந்திக்கிறவர்களும், பெற்ற தாயாரை வைகிறவர்களும், ஆயிரஞ் சதிகளைச் செய்பவர்களும், சாஸ்திரங்களை ஆராயாதவர்களும், பிறர்க்கு உபகாரஞ் செய்யாதவர்களும், தங்களை அண்டினவர்களுக்கு ஒன்றும் கொடாதவர்க

ளும் இருந்தென்ன, போயென்ன? "ஓயாதோ என் கவலை? உள்ளே ஆநந்த வெள்ளம் பாயாதோ?" ஏனோ தானோ என்றிருக்கிறான். அதின் அழகை என்னென்று சொல்லுவேன்? அதென்னவோ? நீங்கள் வேட்டை ஆடி இளைத்துக் களைத்துப் போவானேன்? நீ ஏன் துக்கிக்கிறாய்? உனக்கென்ன குறைபாடு? உனக்கவன் என்னவேண்டும்? ஆறு சுவையோடு உண்டால் என்ன? அற்பமாம் கூழைக் குடித்தால் என்ன? எல்லாந் தெரிந்தவர்களுக்குச் சொல்வானேன்? என் மரத்தின் மேல் ஏன் ஏறினாய்? ஏன் என் பாரில்லை.

Ques. வண்டில் ஓடுவதேன்?
மச்சான் உறவாடுவதேன்?

Ans. அக்காளைக் கொண்டு.

[This is a specimen of a kind of riddle very common among Tamilians.

"The bandy runs—why?

The brother-in-law claims relationship—why?"

By means of the [கொண்டு. 239.] { *bullock (அக்காளை = அந்தக் காளை 25.)*
elder sister (அக்காள், marriage with whom constitutes him a *மச்சான்.* App. x.)]

(b.) Why do you do this? He will not give because he has no money. He will not give even a grain of hemp seed. Give me a little water, at least. You must examine those who claim relationship; for they seem to be deceivers. It rushes on without ceasing. Draw near to the Giver of blessedness. What is all this noise about? What matters it whether such people come or go? Please give me that money.

Lesson 68.

WHETHER.—SOEVER.—ALTHOUGH.

217. *a.* அவனிடத்தில் பத்தி இருக்கிறதோ இல்லையோ என்று சோதிக்கும் பொருட்டுச் சொன்னேன், *I said so to try whether there was devotion in him or not.*(46.)

b. இப்படிச் செய்கிறவன் யாரோ, அவன் கள்ளன்.
Whoever does thus, he is a robber.

c. எங்கே ஆகிலும் கறுப்புநாய் வெள்ளைநாய் ஆகுமா? (100.)
In any place soever can a black dog become a white dog?

d. சிறிய பாம்பாகிலும் பெரிய தடிகொண் டடிக்க வேண்டும்.
Although it be a small snake you must strike it with a big stick.

e. யார் ஆகட்டும் (140) = *(let him be whom he may [ஆக, ஒட்டும்])* = *whosover.*

218. VOCABULARY.

பகரு	(60. III.), *speak.* [POET.]	ஒளி,	*hide.* (64.)
மலர்,	*a flower.*	சூது,	*gaming.*
மலர்க்கால்,	*flowery feet.*	சூதாடு,	*gamble.* (56. II.)
சென்னி,	*a head.* [POET.]	கீழோர்,	*low persons.* (கீழ். 184.)
மிசை,	*upon.* [POET.]	உரை,	*speak.* [POET.]
மூலை,	*a corner.*	நெறி,	(64.) *stiffen, erect.*

Exercise 67.

219. *(a.)* எங்கே ஆகிலும் கண்டதுண்டோ? அந்த ஊராரைக் காத்தவன் எவனோ, அவனை நாம் அண்டிக் கொள்ள வேண்டும். பால் ஆகிலும் தயிர் ஆகிலும் கொடு. மண் ஆயினும் மனை ஆயினும் காப்பாற்றினவனுக்கு உண்டு. பிணியைத் தீர்ப்பது எதுவோ அதுவே மருந்து. அவரைக் கண்டது எப்போதோ அப்போதே தெரியும் அவருடைய செய்தி. (Observe the order. This is very idiomatic.) ஆண் ஆகிலும் பெண் ஆகிலும் பொய்சொல்லுகிறவர்களை நம்பக் கூடாது. யாராகட்டும் சூதாடுகிறவன் கெடுவான். "கீழோர் ஆயினும் தாழ உரை." எப்போது அது காதுகளை நெறித்துக் கொண்டு, வாலைத்தூக்குமோ, அப்போது கொல்ல நினைத்தான். என் மந்தையிலே ஓர் ஆட்டுக்கு இந்தவலிவந்து கோணைக் கோணை இழுத்து எதினாலேயும் பிழையாமற் செத்துப் போச்சு. (Observe the confusion of subjects. The sheep died, and not the spasm).

> பாராயோ என்றுயரம் எல்லாம்? ஐயா!
> Dost thou not see [110. 46.] my sorrow [50.] all? O Lord!
> பகரு'முன்னே தெரியாதோ? பாவியேன்முன்
> Before (I) speak is it not known? Before sinful me (185. c.)
> வாராயோ? இன்னம் ஒருகாலம் ஆனாலும்
> Wilt thou not come? Yet at any time whatever
> மலர்க்கால் என் சென்னி மிசை வைத்திடாயோ?
> the flowery feet (131.) my head upon (251.) wilt thou not place? (263.)

NOTE (1.) In poetry த் after ன் is sometimes changed into ற்
(2.) When ம் follows ம் one is often elided.
(3.) Honorifics are not used in Tamil poetry generally.

(b.) Have you seen my elder sister any where? I will run away some where or other. He is hidden in some corner or other (ஒளித்திருக்கிறான் = he is having hidden). Whoever teaches well he is a Munshi. Whether he be rich or poor a liar will be despised. Can a murderer escape any where? Can you tell me whether the price is what he says or not? Although he is a young man he is a great physician. I asked him those questions to try whether he had learnt the lesson or not.

Lesson 69.

220. In 121 we saw that the negative relative participle ended in ஆத, and that the form in ஆ was chiefly used in poetry. The negative

participial noun ends in ஆதது. Note the following forms:

a. நீ இங்கே வரா முன்னே, *before you came here* (வராததுக்குமுன்னே). வருகிறதற்கு or வருவதற்கு is probably better Tamil.

b. நான் அங்கே போகாததற்கு முன்னே (4th case of neg. partic. noun), *before I went there.*

c. இவன் ஒன்றையுஞ் செய்யாதபடிக்கு வீணாய்த் திரிகிறான், *he wanders about idly doing nothing* (very common, but not very elegant).

நீ இப்படிச் செய்யாதபடி கற்பித்தேன், *I ordered you not to do it.*

[More elegantly இப்படிச் செய்யக்கூடாது என்று சொன்னேன்.]

221. VOCABULARY.

பிழை, a fault.	உருகு, *melt* (56. II. உருக்கு. act.).
கருது, regard, think of (56. II.).	*நினை, think, remember* (56. III.).
கசி, yield moisture, weep (56. I.).	பொறு (56. III.), *bear with, forgive.*

Exercise 68.

222. *(a.)* "*கல்லாப் பிழையுங், கருதாப் பிழையுங், கசிந்துருகி நில்லாப் பிழையும், நினையாப் பிழையுந், துதியாப் பிழையுந், தொழாப் பிழையும், எல்லாப் பிழையும், பொறுத்தருள்வாய்.*"

[POET. IDIOMS. — 1. The sign of the 2d case omitted — *பிழையையும்.* 2. *கல்லா,* &c., for *கல்லாத.* 3. *அருள்வாய்,* future for imperative or optative.]

காணு முன் நிச்சயப் படக் கூடாது. அதைக் கேளா முன் நடுக்கம் வந்து விட்டது. சூரியன் தோன்றாததற்கு முன்னே (தோன்றுதற்கு முன்னே, தோன்றும் முன்னே) வேலைக்காரர் வந்தார்கள். அவன் வராததற்குத் தடை என்ன? அந்தப் பையன் பாடம் ஒன்றையும் படியாத படிக்குத் திரிகிறான். அஞ்சும் மூன்றும் உண்டானால் அறியாப் பெண்ணுங் கறி சமைப்பாள்.

(b). Pardon my fault in not thinking of it. He goes about without speaking a word. Before the sun set he went to sleep. Before I thought of that I wept. Why does the boy go about learning no lessons? Should any one go about doing nothing? He is a blockhead that understands nothing.

Lesson 70.

223. VOCABULARY.—*கன்னங்கரிய,* *very black* (*கன்னங் கறுத்த*).
தன்னந்தனியே, *quite alone* (*தன்னந் தனித்த*).
சின்னஞ் சிறிய, *very little* (*சின்னஞ் சிறுத்த*).
பென்னம் பெரிய, *very great* (பென்னம் பெருத்த).

☞ These and similar forms are in constant use. No rule can be laid down for their formation. Either the ADJECTIVAL FORM is used as *கரிய,* or the பெயர் எச்சம் (76.) as, *கறுத்த.*

மணல்,	*sand.*	நிறம்,	*a colour.*
தயங்கு	(56. II.), *to languish.*	பேய்,	*a devil.*
காமம்,	*lust.*	செக்கச்சிவந்த,	*red.*
காமாதி,	*lust,* &c. (151.)	பச்சைப் பசந்த,	*green.*
ராக்ஷசன்,	*a demon.*	புத்தப்புதிய,	*new.*
இலக்கு,	*a butt to be aimed at.*	இடை, *the waist*	*middle.*

Exercise 69.

224. *(a.)* சின்னஞ் சிறியர்கள் செய்த மணற் சோற்றை ஒக்கும். சின்னஞ் சிறுத்த இடை. கன்னங் கறுத்த முகமுள்ளவன் வந்தான். பென்னம் பெருத்த புயத்தோடிருக்கிறான். சின்னஞ் சிறியேன் என்ன செய்வேன்? தன்னந் தனியே இருந்து தயங்கினாள். செக்கச் சிவந்தவளாய் இருக்கிறாள். அந்த வயல் பச்சைப் பசத்த நிறமாய் இருக்கிறது. புத்தப்புதிய நெய்கொண்டு வந்திருக்கிறாள்.

"கன்னங் கரிய நிறக் காமாதி ராக்ஷசப் பேய்க்
Jet black in hue—lust and other diabolical demons unto
கென்னை இலக்காக வைத்த தென்னே? (215.) பராபரமே!"
Me a butt why has't (thou) left? O Godhead!"

[பேய்க்கு + என்னை = பேய்க்கென்னை. நிறக் காமாதி (151. e.) ராக்ஷசப் பேய்க்கு, = நிறத்தை உடைய காமம் முதலான இராட்சதராகிய பேய்களுக்கு.

(b.) The demon's face was jet black and he had great broad shoulders. She went all alone in the desert. He has a very little dog. A very black cloud hid the sun. Must I languish alone? The corn is quite green in the fields. That cow is entirely red.

Lesson 71.

முன், பின். (See vocabulary 84.)

225. (1.) முன், *before,* in place or time.
பின், *after,* in place or time.
{ Both these words are used in the formation of innumerable compounds of very common and idiomatic use.

For முன் are used also

(2.) முன்னே, emphatic;
முன்பு, sometimes with ஆய் and ஆக;
முன்னம், முன்னமே, generally relating to time;
முன்னற, vulgar; முன்னர், poetical.
முன்னாக, and முன்னாலே.

(3.) முன் and பின் form compounds thus: முற்காலம், பிற்காலம், *the before-time* and *the after-time.* Here ன் becomes ற் before க்.

(4.) பின்னே, பின்பு, பின்னர் poetical, பிற்பாடு (பாடு = a state), பின்னாலே, பிறகு (from S. Prâk), are also used.

(5.) பின்னே is used for *moreover.*

(6.) The verbs முந்து and பிந்து (56. II.) are used for *go before*, and *come after;* of these the verb. part. முந்தி and பிந்தி are idiomatically employed.

(7.) முன் and பின் are used in composition with many verbs. Thus,
முன்னிடு, (68.) *put before.*
முன்னில்லு, (70.) *stand before, protect.*
பின்னிடு, (68.) *put after.*
பின்பற்று, (62.) *imitate, follow after.*
பின்வாங்கு, (62.) *draw back.*

Exercise 70.

226. *(a.)* ஆற்றிலே புருஷன் முன்னும் பெண்சாதி பின்னுமாகப் (136.) போகிற பொழுது மற்றொருவன் இவர்கள் பின்னாலே இறங்கி வந்தான். அவர்கள் வருகிறதற்கு முன்னே. சிலநாள் போன பிற்பாடு. அவனுக்குப் பின்னாலே திரும்பிவந்தார்கள். சற்றிடந் தாண்டின பிற்பாடு. என் பின்னே நீங்கள் எல்லாரும் வாருங்கள் (com.). "வெள்ளம் வரும் முன்னே அணை போட வேண்டும்." [Prov.] முன் பின் செய்கிறபடி செய்! நான் முந்திப் போகிறேன், நீ பிந்திவரலாம். முந்தாதே. பின்வாங்காதே. முன்னிட்ட காலைப் பின்னிட்டுத் திரும்பினான். அவன் முன்னுக்கு வரமாட்டான்.

(b.) The brother went before and the sister came after. Dig your garden before the rain comes; for afterwards there will be no time. Afterwards I heard them say so. Compare the context (sentences before and after). I knew this before. The criminal stood speechless before the judge. There were upright judges both before and after him. Look well both before and behind.

Lesson 72.

போல், போல, AS.

227. Of போலு (56. [III.]) *resemble, be like*, the root போல், the infin. போல, the 3d neut. fut. போலும், and the past rel. part. போன்ற (rarely) are in use, and signify LIKE, AS.

In the higher dialect many other such particles are used. [Com. Pope's III GRAM. 109.]

(1.) All these govern the 2d case.

(2.) But as in other examples, the nom. may be put for the acc.

(3.) ஏ may be added, போலே, போலவே, போலுமே.

(4.) Sometimes போல், போல are added to the subjunctive in ஆல் 95. a. Thus செய்தால் போல் = *as if one should do.*

They are often added to the verbal noun in து: செய்கிறதுபோல (87.) = *like the doing.*

(5.) The forms செய்கிறுப்போலே and செய்தாப்போலே = *as soon as* (you) *do or did*, are in VERY common use, being pronounced in a very hurried way so as to sound like செய்ருப்பலே and செய்தப்பலே. They are probably, corruptions of செய்கிற ஆ போல = *like the way of doing* (ஆ in old Tamil means, *way, manner*). செய்யுமாப்போல, which also frequently occurs, is a correct form (செய்யும், ஆ போல்), *as if (he) would do.*

228. VOCABULARY.

தளர் (56. I.), *totter, grow feeble.*
குமிழி, *a bubble.*
நீர்க்குமிழி, *a bubble on the water,* (131.)
உடல், *a body* (உடம்பு).
கிளி, *parrot.*
விலை, *price.*
விலை உயர்ந்த, *very valuable* (உயர், 56. I. *be high*).
விலை ஏறப்பெற்ற, *precious* (விலை, ஏற, *to ascend.* பெற்ற, *which has obtained.* பெறு, *obtain,* 56. (II.))
அருமை, *costliness.*
அருமையான, *costly.*
முத்து, *a pearl.*
இரத்தினம், *a gem.*
இரத்தினக்கல், *a jewel.* (131.)
வண்ணான், *a washerman.*
அம்பட்டன், *a barber.*
குயவன், *a potter.*
தவை (56.III.), *to beat clothes on a stone.*
தீட்டு (56. II.), *to sharpen.*
தீட்டுக்கல், *a hone* (சாணை).
பிடி, *seize* (56. III.).
பிடிகல், *a potter's stone.*
மாதிரி, *manner, fashion.*

Exercise 71.

229. (*a.*) "தாய் இருந்தும் பிள்ளை தளர்ந்தாற் போல் (ல் before ப் into ற்) எவ்விடத்தும் நீர் இருந்தும் நான் தளர்ந்து நின்றேன்." கேட்டதையே சொல்லுங் கிளிபோல (கிளியைப்போல). விலையுயர்ந்த இரத்தினக் கல்லைப் போலப் பிரகாசித்தது. அப்படி அனுப்பியது போல் தோன்றுகிறது. மற்றவர்களைப் போல என்னை நினைக்காதே (for நினையாதே)! நித்தியம் ஒன்றில்லாத நீர்க்குமிழி போன்ற உடல். அந்தச் சாட்சிக்காரர் மூன்று பேருக்குள்ளே வண்ணான் தவைக்கிற கல்லைப் போலவும், அம்பட்டன் தீட்டுக்கல்லைப் போலவும், குயவன் பிடிகல்லைப் போலவும், வேறு வேறு மாதிரியாகச் செய்து கொண்டு வந்தார்கள். உன்னைப் போலும் விவேகமுள்ள மந்திரி எந்தத் தேசத்திலுங் கிடைப்பது மிகவும் அரிது. அக்கனியைப் போலவே இக்கனி இருக்கின்றதே. "நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரங் கல்மேல் எழுத்துப் போற் காணுமே!" இருந்தாப்போலிருந்து வாயு வருகிறதுண்டு.

(*b.*) Is there any one like him? As you sent me so I will send him. In colour it is like saffron, in shape like the moon. It would be hard to find a man as sensible as the shop-keeper is. In fashion that garment is like the mother's. Don't think of him as of others. Suddenly the messengers came to fetch him. Is a black rock equal in value to a precious stone? Are there any counsellors as valuable as these? Youth is like a bubble on the water. It would be very hard to find a friend as faithful as he is. So in this case also you may judge.

Lesson 73.

230. குறித்து is the adverb. part. of குறி (56. III.) *point out by a sign* = *having pointed out;* பற்றி is the adverb. part. of பற்று, *lay hold of* (56. II.) = *having laid hold of;* தொட்டு is the adverb. part. of தொடு [56. (II.)] *touch* = *having touched.*

These are used for *concerning, regarding, about, touching.* குறித்து is correct and elegant; பற்றி is correct, but not elegant; the use of தொட்டு appears to be a mere foreign idiom.

அந்தக்காரியத்தைக் குறித்துப் பேசினார்,
அதைப் பற்றிப் பேசினார,
அதைத் தொட்டுப் பேசினார், } *he spoke about that affair.*

In very common talk, இட்டு (from இடு, 68. 263.) is used in the same way:

அதை இட்டு வெகு பாடுபட்டேன், *I suffered much from that.*
பேரில் or பெயரில் (7th case of பேர் or பெயர், *name*) = *about.*

ஒரு வித்துவான் இராயர் பேரில் ஒரு பிரபந்தம் பண்ணிக்கொண்டான்,
A learned man about the king a work composed.

நோக்கி verb. part. of நோக்கு, *look at* (56. II.) = *having looked at.*

பார்த்து verb. part. of பார், see (56. III.) = *having seen.*

These are used as equivalent to TO in such sentences as:

He said thus TO *him,* {
அவனை நோக்கி இப்படிச் சொன்னான். (This is rather stiff.)
அவனைப் பார்த்து இப்படிச் சொன்னான். (This is colloquial.)
அவனிடத்தில் இப்படிச் சொன்னான். (This is better than either of the preceding.)
அவனுடனே இப்படிச் சொன்னான். (This is not very good, but common.)

☞ The verb. participles are often elegantly and idiomatically used in Tamil for particles. This requires much attention. Comp. 77.

231. VOCABULARY.

சிபாரிசு (Pers.) *recommendation.*	சிறுமை, *disgrace* (சிறு + மை, 184.)
மூடன், *a fool.*	கனம், *weight.*
குந்தகம், *a hindrance* (குந்தகக்கேடு is also used).	கன, adj. *much.*
ஓசரம், *cause.*	சும்மா, *idle, without reason.*
பாடு, *part.* பாட்டுக்கு = *on account of.*	கலியாணம், *a wedding.*
	வேண்டு (56. II.), *desire, seek for.*

Exercise 72.

232. *(a.)* அவனைப் பார்த்து: இனிமேல் அப்படிச் செய்யாதே என்றான். ஒரு மூடனைக் குறித்துச் சிபாரிசு செய்தான். அந்த ராசா தன் பிள்ளைகள் படியாமல் மூடர்களாய் இருக்கிறதைக் கண்டு, வெகு விசனத்தோடே ஆலோசித்தான். நீ அங்கே போய் எதைக் குறித்துப் பேசுவாய்? சத்தத்தினாலே மாத்திரம் பயப்படல் ஆகாது. (Here சத்தத்தைக்குறித்து might be used.) கலியாணத்தைக் குறித்துக் கடன்பட்டேன். அவனுக்கோசரம் அதீக [அதிக] சிறுமைப் பட்டேன் (ஓசரம் is used here for குறித்து). அவனை இட்டுக் காரியம் எல்லாம் குந்தகமாய்ப் போய் விட்டது. விருதாவாய் வல்லை; ஒரு காரியத்தை வேண்டி வருகிறான் (வல்லை = வர வில்லை). வயிற்றுப் பாட்டுக்கு வருத்தப் படுகிறான். கல்வியைப் பற்றிக் கன பாடு பட்டேன். ஒரு முகாந்திரத்தைப் பற்றித் தங்களிடத்தில் வருவார்களே அல்லாமல் சும்மா வர மாட்டார்கள்.

(b.) I have inquired concerning it. He talked about the affairs of the village a long time. I told you before all about it. What will you talk about to the mother? It is said concerning this in the 3d chapter. He has some end in view in coming to you. What are the villagers saying about that matter? He addressed the king and his counsellors concerning the affairs of the country. He has composed a poem about the king. The man is very much troubled about the means of subsistence. The teacher said to him, learn this lesson carefully.

Lesson 74.

233. Examples illustrating the idiomatic use of the 1st case.

☞ ELLIPSIS IS THE KEY TO ALMOST EVERY TAMIL IDIOM.

The first case often stands for the other cases (50.)

(1.) பட்டணமே (193.) போனான், *he went to the town* (1st for 4th).

(2.) திரும்பி அவன் இடம் போ, *go to him again* (1st for 7th: இடம் for இடத்தில்).

(3.) சுதரிசனன் என்னும் (132.) அரசன் ஒருவன் (172.) இருந்தான், *there was a king called Su-darisanan (good-aspect).*

(An example of apposition.)

(4.) காலையும் மாலையும் நான்கு வேதம் ஓதாத அந்தணர் என்பவர்கள் அனைவரும் (127.) பதரே.

(Nom. for 7th and 2d.)

Those Brâhmans who do not recite the 4 Vèdas in the morning and in the evening are all chaff.

(5.) அழுத (50.) கண்ணும் சிந்திய மூக்கும் ஆகக் (136.) கலங்கி நின்றான், *with weeping eyes he stood, snivelling and confounded.*

[Here ஆக with the nom. case is used for the 3d case in ஒடு, or there is an ellipsis of உள்ளவன் (133. 184.) after the nom.]

(6.) ஒருநாள் ஒரு பிராமணன் வீட்டில் இருவரும் விலாப்புறம் வீங்கச் (168.) சாப்பிட்டார்கள், *one day in a Brâhman's house they both ate till their ribs were well lined.* [பிராமணன் is 6th case. நாள் is used adverbially.]

(7.) அநேகநாளாய் வாழ்ந்துகொண்டிருந்தார்கள், *they lived prosperously, for many days.*

[Here there is an ellipsis of கள். ஆய் = ஆக.]

234. Vocabulary.

தேசாந்தரம்,	*a foreign country* (Sans. com.).	பசை,	*moisture.*
இடறு	(56. II.) *stumble, trip.*	வெள்ளெலும்பு	(வெள், *white*), *a well-picked bone.*
நொண்டி,	*a lame man.*	கௌவு	(56. II.), *snatch at.*

Exercise 73.

235. தேசாந்தரம் போனான்; போகும் போது [106. (2.)] ஒரு நாள் அந்த எருது கால் இடறி, விழுந்து, நொண்டி ஆயிற்று. [123. *a.*] தாகம் எடுத்துத் தண்ணீர் குடிக்கப் போனான். நாயும் பசை இல்லாத வெள்ளெலும்பைக் கௌவிக், கடித்துப், பல்லசைத்தும் [100.] பசி தீராமல், சந்தோஷத்தை அடைகிறது. அரசரும் நெருப்பும் பாம்புஞ் சரி. ஊரது தூரமாய் இருக்கிறது (அது is redundant). அதைப் பார்த்து மனம் பொறுமல் பேசினான். பாவஞ் செய்த யாவரும் ஆக்கினை அடைவார்கள். கல்லெறிதூரம். ஒரு நாள் இராத்திரி.

Lesson 75.

236. Examples illustrating the idiomatic use of the 2d case. (18.)

(1.) அவனை மொட்டை அடித்தான், *he shaved him bare.*

(2.) ஊரைப்போய்ச் சேர்ந்தான், *he went to the town.* (For ஊருக்கு (50.))

(3.) அதைப் பாசாங்கென்று அறியாமலிருந்தான், *he did not know that it was mere pretence—(it, that it was).*

(4.) உயர்திணை என்று மனிதரைச் சொன்னார்; அஃறிணை என்று மற்றவைகளைச் சொன்னார், *he calls men "high caste;" and other things "low caste."*—(The technical words for the grammatical division of nouns into 1. those which indicate rational beings: உயர்திணை; 2. irrational beings: அஃறிணை (29.)).

[The sign of the 2d case in Tamil is ஐ. In Malayâlim ê. In Telugu it is *nu* or *ni*, in which the real suffix is probably *n*. In ancient Kanarese it is *am*. In modern Kanarese A or ANNU, and in all the languages of the Indo-European family M or N are for the most part found in the accusative.

The origin of the Tamil suffix ஐ seems to be this: the nasal was dropt. (the Tamil people often pronounce அவன் AVE'), and final அ (retained in Kan. and lengthened into Ê in Mal.) became ஐ, (as தலை is the Tamil for the Kanarese TALA.) Comp. Bopp. 149.]

237. VOCABULARY.

பாழ்ங் கிணறு, an old well. *பாழ்* (allied to *பழைய*) *forsaken, decayed.* *பாழ்* + அம் + கிணறு and அ elided.

நொண்டு (56. III.), *be lame.*

கிட்டு (56. II.), *draw near.*

மொட்டை, baldness.

மொட்டை அடி, make bald (strike bald lit.).

கோடாலி, *an axe.*

குணக்கு, *crookedness.*

Exercise 74.

238. என்னமோ பிள்ளை காலை நொண்டுகிறது. அந்தச் சிங்கத்தைச் சிநேகம் பண்ணிக் கொள்ளுகிறேன். முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் பட்டால் கிட்டுமோ (not தேனை)? சேறும் நீரும் மிகுந்த ஒரு பாழ்ங்கிணற்றை இதில் இருக்கிறதென்று காட்டினான். எய்தவனை நோகாமல் அம்பை நோகலாமா? நாயின் வாலைக் குணக்கெடுக்கலாமா? ஆறு கரை புரண்டு போகிறது. எலி வளை தோண்டக் கண்டேன். பல் விளக்கிக் கொண்டிருந்தான். என்னை அப்படி நினைக்க வேண்டாம். என்னை இப்படிச் சொல்லலாமோ? எங்களுக்கு ஒரு தண்டனையும் இல்லாமற் காப்பாற்ற வேண்டும். அவனை இருமாதே என்று சொன்னேன். இது நான் காடு வெட்டுங் கோடாலி. இராசன் கலகக்காரரைச் சிறைச் சாலையை அடைவித்தார். (Two accusatives.)

Lesson 76.

Examples of the 3d case.

239. The particles connected with the regular terminations of the 3d case are:

உடன் = *together with;* கொண்டு = *by means of.*

(1.)	நீங்கள்	ஒருவரை	ஒருவர்,	முழுப்	பூசினிக்காயைச்	சோற்றோடே,
	You	*one*	*one*	*a whole*	*melon*	*with rice*
	மறைக்கிறது	போல,	மோசஞ்	செய்கிறது	நியாயத்துக்கு	விரோதம்
	hiding	*like,*	*deceit*	*to make*	*to right*	(is) *opposed*
	என்று	கண்டித்தான்.				
	thus	*he reproved.*				

(2.) *அவள் சீக்கிரத்திலே ஓடி இலையோடே அந்தச் சாதத்தை எடுத்து வந்தாள், she ran with haste and brought the rice in the leaf.*

(3.) என்புருஷனை என்னோடே கூடச் சேர்க்க வேண்டும், ஐயா! *Sir, unite me to my husband.*

(4.) பாலோடு தேன் கலந்திருக்கிறது, *there is honey mixed with milk.*

(5.) அந்தப் பிள்ளையை மார்போடணைத்து முத்தங் கொடுத்தான், *he embraced the child and kissed it.*

(6.) அவனை ஆதியோடந்தமாகக் கேட்டுக் கொள்ளுங்கள், *hear him from the beginning to the end.*

(7.) இவ்விருவர்கள் ஒரே ரூபமாயிருக்கிற படியால், *since these two are both of one shape.* [படி + ஆல் (often written படியினால், படியினாலே) = *by the step that, since.*]

(8.) என்பேச்சைத் தள்ளி இருமினான். அதினாலே வெட்டிப் போட்டேன் என்றான், *he coughed when I told him not. Therefore, I stabbed him.*

(9.) ஜன்னலாலே தெருவைப் பார்த்துக்கொண்டு நின்றாள், *she stood looking out of the window.*

(10.) அவன் வாய்ச்சொல்லைக் கொண்டே இதை அறிந்தேன்.
His mouth-word by means of indeed this I have known.

(11.) அரண்மனை வேலைக்காரி தன்புருஷனோடு சொன்னாள், *the palace servant-maid told her husband.*

Exercise 75.

241. வெகு விசனத்தோடே ஆலோசிக்கத் தொடங்கினான். இன்னும் சம்பாதிக்க வேண்டும் என்கிற ஆசையினாலே ஆலோசிக்கலானான். ஆயிசு பலத்தினாலே பிழைத்திருக்கிறது. புல்லு முதலாகிய மேய்ச்சலாலே மிகவும் பெருத்துக் கொழுத்து அந்தக் காட்டிலே திரிந்து கொண்டிருந்தது. அவன் வாயைக் கொண்டே நிசத்தை வெளிப்படுத்தினார்.

"கன இருளில், அடர்மழையில் கதறுகின்ற தவளைகள் போல்,
In gross darkness [and] in thick rain, croaking frogs like,

தன்னை உணராச் சாத்திரத்தால் தர்க்கம் இட்டால் (163.) பலிப்ப தென்ன?"
itself which does not understand—by means of science, disputations
if you engage in, that which will result (is) what?

[அடர் for அடர்ந்த a poet. form. 270. (5.).]

பாலோடு கலந்த நீர் பால் ஆகும் அல்லாது நீராய்நிறந்தெரியாது. அதை விசாரிக்கிறதினால் நமக்காவதென்ன? யார் புகழோடு சீவிக்கிறார்களோ அவர்களே பாக்கியவான்கள். "சிறு குழிகள் கொஞ்சந் தண்ணீரால் நிறையும்." பெருமையுடனே சீவிக்கிறதே நல்லது. அவர் காலால் இட்ட வேலையை நான் தலையாற் செய்து கொள்ளுவேன். எங்களாற் செய்வதென்னென எண்ணினார். குடும்பத்தோடு கூடவிருந்த ஒருவன்.

Lesson 77.

Examples of the 4th or Dative case.

242. The particles connected with the 4th case are:

(I.) ஆக = *for* (vulg.) (II.) *என்று;* 82. *(இவனுக்கென்று கொடுத்தேன், I gave saying to him.)* (III.) *நிமித்தமாக, மூலமாக = for the sake of.* 157.

~~~~~~~~~~~~

(1.) *யானைக்கும் பானைக்கும் சரியாய்ப் போயிற்று (போச்சு.)*
The elephant and the pot are equivalent (in the account): *Put one against the other.*

(2.) எனக்கு இருபது பசுக்கள் இருக்கின்றன,
to me twenty cows there are.

(3.) *மூவரும்வந்து உனக்கெனக் கென்று வியாச்சியப் பட்டார்கள்,*
three persons came and disputed about it, each claiming it.

(4.) *ஒருத்தி ஒருகாசுக்கு மீன் வாங்கி வந்து வைத்தாள்,*
a certain woman FOR *a cash bought some fish and bringing it kept it* (in the house).

இம்மைக்கும் மறுமைக்குஞ் சுகங்கொடுக்கிற புத்திரன், a son who imparts present and future bliss.

(5.) *அந்தப் பட்டணத்துக்குக் காதவழி தூரத்திலே இறங்கினார்,*
he alighted a kâtham from that town.

(6.) *உன்தாயாரையும் உன்தகப்பனாரையும் நான்கண்டு நெடுநாள் ஆயிற்று,*
[your mother and your father I having seen, a long day has elapsed.]

It is a long time since I saw your father and mother.

(7.) *நீ அவர்களுக்கு நான் சொன்னதாகச் சொல்லவேண்டிய*
[you to them I as having said to say which must
தென்னவென்றால்;
as it follows.]
You must tell them from me that, &c.

(8.) பேருக்கு ஒவ் வொரு செம்புநீர் கொடுக்க சொன்னான்,
to each one one vessel of water to give he commanded.

(9.) *அவன் "என்பிள்ளை எங்கே" என்றுகேட்டதற்கு "இங்கே இல்லை,"*
he "where is my child" to the asking, "(He is) *not here"*
என்றார்கள்.
they said.

(10.) *அவன் வெளவின திரவியத்தை வித்துவானுக்கு வாங்கிக்கொடுத்துத்*
he which had grasped the wealth to the scholar having taken, he gave,
திருடனுக்குச் சாஸ்திரப்படி தண்டனையுஞ் செய்தான்.
and to the thief according to the law punishment he awarded.
~~~~~~~~~~~~

(11.) வீட்டுக்குள்ளே இருக்கிறான்,
he is within the house.

[Here கு is the sign of the 4th case, to which is added உள்ளே a sign of the 7th. *This accumulation of inflexional particles is frequent in Tamil, and in the other S. Ind. dialects.*

Thus IN-TO, WITH-IN, &c. combine two prepositions.]

243. VOCABULARY.

உரி, *possession;* whence உரிமை, *possession.*

உரியவன், ள், து, *he, she, it, to whom or which* (it) belongs, governing a dative of the thing possessed.

துவரை, *a leguminous plant.*

பருப்பு, *peas* துவரம் பருப்பு. (131. c.)

தாளம், *time in music.*

ஒ, *agree with* (56. III.) ஒத்து வருகிறது &c.

அடிக்கடி (அடிக்கு, *to a step,* அடி) or, vulg.

அடிக்கொருதரம், *often (one time to a step.)*

Exercise 76.

244. ஓர் அறைக்குள்ளே. அதற்குத் தகுந்த அபராதம் வாங்கிக், கோழிக்காரிக்குக் கோழி பதிலுக்குக் கொடுக்கும்படி உத்தரவு செய்தான். அந்த வேளைக்கு (வேளையிலே) துவரம் பருப்பு எங்கும் அகப்படவில்லை. எவ்வளவு தொகைக்கு வாங்கினாலும் இதுதான் எனக்குச் செலவுக்கு வேண்டும். என்னை இவன் என்ன செய்யலாம்? (for 4th.) எனக்குக் கோபம் வந்தது உனக்கு எப்படித் தெரியும்? இதற்கு என்ன செய்யலாம்.

நீ இதற்கு என்ன சொல்லுகிறாய்? நாளைக்காலமே ஊருக்கு அப்புறம் கொல்லை மேட்டில் இருப்பேன். பணத்திற்குரியவனிடத்தே பணஞ் சேர்ந்தது (இடத்து elegantly for இடத்தில்). இவனுக்கு யாதொரு கவலைக்கும் இடம் வையாமல் போஷித்துக் கொண்டு வருகிறேன். அது பின்னடிக்கு வருத்தத்துக்கு ஏதுவாய் இருக்கும். அது தாளத்துக்கு ஒத்துவரவில்லை. வெளிக்கு நல்லதென்றார்கள். ஆண்டவருடைய வாக்குக்கு எதிர் வாக்கிராது. இரண்டுக்கும் பெரியசண்டை விளைந்தது.

நமக்கு வழிதொலைய வேண்டும். அதற்கு ஒருகதையைச் சொல்லுகிறேன். இராசா வரைக்கும் தெரியப்படுத்தினான்.

Lesson 78.

Examples of the 5th case.

245. (1.)	அந்த நீரிலே	பாதியினாலே	கால்களைச்	செவ்வையாய்க்
	OF that water	*with the half*	(my) *feet*	*well*

கழுவிக்கொண்டேன்.
I washed. [106. (4.)]

இதிலிருந்த குரங்குகளில் ஒன்று, *one* OF *the monkeys that were in it.*

(2.)	பாதிச்சேறு	ஆயினும்	உன் காலிலே	போகவில்லை.
	(Half the mud	even	your feet FROM	has not gone.)

You have not half cleaned your feet of the mud.

(3.) இவ்விருவர்களிலே உன் புருஷன் யார் என்று கேட்டான்.
Of these two [is] thy husband which?" he asked.

கூடவருகிற சிலபெயரைப் பார்த்து இது எப்படி என்றான்.
He asked some of those who came with him how it was.

(4.) இவைகளிலே எதைப்போல் இருக்கின்றவன் உத்தமன்.
Of these the best is he who resembles which?

(5.) வரன்முறையாக அவரவர்கள் கையிலிருந்து மாம்பழம் வந்த
(In order each one's from the hand the mango-fruit which came

வகை தெரியும்.
the way is plain.

[I] have found out in order the way in which the mango-fruit passed from hand to hand.

(6.) அங்கிருந்து யாராவது வருகிறபேர் உண்டா? *Is any one coming from that place* (அங்கு, *that place*, used as a noun, and இருந்து used as the sign of 5th case)?

(7.) கல்விப்பொருளிலுஞ் செல்வப்பொருளிலுங் குறையில்லாதவர்கள். *Those who abound in the wealth of learning, and in the wealth of earthly good.*

(8.) என்னிடத்திலிருந்து, *from me* = என்னிலிருந்து.

[Here the sign of the 7th case is put between the root, and the sign of the 5th case. Lit. = *having been in the place of me.*

(9.) மரத்துக்காரன் சந்தடி அறிந்து வீட்டிலிருந்து அதட்டிக் கொண்டே ஓடி வருகையில் திருடன் அதை அறிந்து மரத்தில் இறங்கி வந்தான்.

The owner of the tree hearing the noise came running from his house, scolding all the way. The thief hearing him came down from the tree. [Obs. the uses of அறி.]

246. VOCABULARY.

செவ்வையாய் for செம்மையாய், *rightly, well.*
வரன் முறை (வரல் *the coming.* முறை, *order*), *in order.*
ஒப்பி, (56. III.) *deliver up to.*
வசம், *charge.*
குரங்கு, *a monkey.*
இதாகிதம் (S. HITA + AHITA, *proper and improper*), *good and evil, right and wrong.*
சீவனம், *a livelihood.*

Exercise 77.

247. தன் பிள்ளைகளை அவன் வசத்திலே ஒப்பித்தான். அப்படி இருக்கையில். சிங்கமானது தன் பராக்கிரமத்தால் சம்பாதிக்கப்பட்ட இராச்சியத்தைச் சுகமாக அநுபவித்துக் கொண்டிருக்கையில் அந்த குரங்குகளில் ஒன்று வந்தது. இராசாவுக்கு அடுத்திருக்கையில் வெகு சனங்களுக்கு நன்மை செய்யலாம். இதாகிதம் தெரியாமற் கொஞ்சத்திற் சீவனம் பண்ணுவான். மலை உச்சியில் ஒரு பெருங்கல்லை ஏற்றுதல் அரிது; அங்கிருந்து அதைத் தள்ளுதல் எளிது. நல்ல மழை பெய்திருக்கையில் எப்படி விதையினின்று முளைகள் புறப்படுமோ அப்படி ராசாவின் கேள்விக்கேற்க என் வாக்கினின்றும் உத்தரவு புறப்படும். மணியினின்று ஒளி பிரிக்கப் படுமோ?

Lesson 79.

Examples of the 6th case.

248. (1.) *தன் வீட்டுத் தோட்டத்து வழியாக வந்தான், he came by the way of his house garden.*

☞ வீட்டு, தோட்டத்து, { Ellipsis of the casal sign, the nouns வீடு and தோட்டம் being prepared for its reception according to 18. This has been termed the "oblique case," or the oblique form of the 6th case. This is a very common and at the same time elegant form. Comp. 131.

தகப்பன் உத்தரவில்லாமல் நீ வரக் கூடாது.
You must not come without (your) *father's consent.*

Here also there is an ellipsis of the sign. Comp. 50.

(2.) *பொன்னின் குடம் உடைந்தாற் பொன் ஆகும்; மண்ணின் குடம் உடைந்தக்கால் என் ஆகும்?*

When the vessel of gold is broken—it is gold. When the vessel of earth is broken—what is it?

[இன் used for the sign of the 6th case. 18. This form is too much used by Europeans. Even here perhaps பொன்னாலாகிய குடம் would be better—"*a vessel made of gold.*" 130.]

(3.) *யாரது என்னுன்* (for *யாருடையது*, or *யாரது*), *whose is it?*

[The form *யாரது* is poetical, *அது* being a term. of the 6th case in the higher dialect.]

(4.) *நம்முட* (for *நம்முடைய*) *our* [VULGAR].

(5.) *மரத்துக்காரன், the owner of the tree. வீட்டுக்காரன், the house-holder.* Comp. 18.

[*மரம்*+*காரன்*—the particle *அத்து* being inserted. 18.]

(6.) *தன் மனையாளைத் தாய் வீட்டுக்கு அனுப்பிப், பின்பு அவளைப் பேணாத பேவதை பதர், the block-head who sends his wife to her mother's house and does not afterwards support her is chaff.*

[*தாய்* = *தாயினுடைய*.]

(7.) *வித்துவான் கற்ற* (70.) *கல்வி*. 190.
The scholar's learning.
Lit. "the learning which the scholar has learnt."

☞ It is very elegant and idiomatic in cases like this to use an adjective participle instead of the 6th case.

(8.) *அவளுக்குரிய குணலட்சணங்கள், her qualities and excellencies.*

☞ *உரிய* is often used for the English Possess. case.

(9.) *நடுக்கடலில் திசை தப்பி மயங்கின மாலுமி, a pilot bewildered, who has lost his course, in the middle of the sea* [= in mid-ocean.]

249. VOCABULARY.

எலும்பு,	*bone.*	வாய்க்கால்,	*a water-course.*
ரெட்டி,	*a reddy, a caste of cultivators.*	சிஷன்,	*a disciple.*
		சண்டி,	*an obstinate fellow.*

Exercise 78.

250. *தண்ணீர் குடிக்க ஆற்றங்* கரைக்குப் போனான். சுவாமி காரியஞ் செய்யாமல் இரை தேடுகிறதையே பெரிதாக நினைக்கலாமா? அவன் பக்கத்திலே உட்கார்ந்தேன். கன்றெலும்பிருக்க அதை ரெட்டி எலும்பென்று நிச்சயித்துக்கொண்டார்கள். அந்தத் தண்ணீர் வாய்க்கால் வழியாய் ஓடிற்று. குருமொழி கேளாத சிஷன். தாய்வார்த்தை கேளாத சண்டி. மனக்கவலை மாற்றுகிறது அரிது. தாய் வீட்டுக்குப் போனாள். அந்த இராசாவுக்குரிய மாட்சிமையும் அதிகாரமும். அத்தேசத்து மனிதர்.*

* ஆறு. Here the particle அம் is inserted instead of the sign of the 6th case: ஆறு + அம் + கரை = ஆற்றங்கரை, the river's bank. [Pope's III Gram. 108.]

Lesson 80.

Examples of the 7th, or locative ablative case. *(இல், இடத்தில்.)*

251. In the higher dialect there are upwards of 20 particles denoting place or position that may occupy the place of இல். Among these are மேல் *above*, கீழ் *below*, புறம் *side*, உள் *within*, முன் *before*, பின் *after*, இடம் *place* (இடத்தில்) and பால் *part*. அண்டை, அருகு, அருகே, அருகில், கிட்ட, *near*, may also be used.

☞ Some of these particles are prefixed to verbs to form compounds, which are in constant and familiar use. (Comp. 225. (7)) Thus:

மேற்கொள்ளு, [மேல் + கொள்ளு. 56. (III.)] *overcome* (obtain the higher place).

கீழ்ப்படி, [கீழ் + படி. 56.] *submit* (sink to the lower place.)

உட்பிரவேசி [உள் + பிரவேசி. 64.], *enter in.*

முன்னிடு [முன் + இடு. 68.], *put before:* [give the priority].

பின்வாங்கு [பின் + வாங்கு. 62.], *draw back:* [take the place behind.]

புறப்படு [புறம் + படு. 56. (II.)], *set out:* [experience the outer place.]

கண், meaning *place*, is also used. These are all essentially nouns and remain so, however compounded. [Pope's III Gram. 63.]

(1.) *அதில் கண்ட பாம்பை எல்லாம் பிடித்தது, it caught all the snakes that were found in it.*

(2.) பொதுவிலே நாலாயிரம் வராகனைக் கொடுத்தான், *he gave* 4000 *Pagodas in common.*

(3.) இவன் கையில் கொடுத்தேன், *this man's hand in I gave.*

(4.) அவன் உடனே துலுக்கனிடத்திற்குப் போய்க் கொடுக்கிறேன் என்றான், *he immediately to the Muhammedan going, "I give," said he.*

[கு of the 4th case added to இடத்தில்.]

(5.) அந்தப் பெண்ணருகில் சென்று பேசினான்,
He approached the woman and spoke.

(6.) ஊரின் அருகே தனிமையாக வருகையில்,
(Of the village near alone in the coming.)
When he was coming near the village alone.

(7.) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்,
Stroke on stroke if you strike even the grinding stone will be moved.
(நகரு 60. I. *be moved.*)

(8.) கபடியாய் இருக்கிற பிரதானி புத்திசாலி ஆனாலும் அவன் ஒரு போதும் இராசாவண்டை இருக்கல் ஆகாது, *a deceitful minister though he be clever, must not be near a king.*

(9.) அவன் காலில் விழுந்தேன், *I fell* AT *his feet.*

(10.) மூங்கிலிலை மேல்
தூங்கும் பனி நீர்.
The Bambû-leaf upon
Will sleep the dew-water.*

252. (VOCABULARY.

சாதி	(56. III.), *to assert, maintain.*	வறுமை,	*poverty.*
செம்பு,	*a brass vessel.*	இன்னாது,	*it is evil* (POET.).
முளை,	*a tender shoot.*	திரு,	*prosperity.*
மணம்,	*odour* (POET.).	கல்	(70.), *learn.*
எள்,	*rape seed.*		

Exercise 79.

253. ஒருவன் பத்துப்பாரம் இரும்பு வாங்கி, ஒருவனிடத்திலேவைத்து, மற்றொரு தேசத்திற்குப் போய்ச், சில வருஷங்கள் கழிந்த பின்பு வந்து, அவனை "இரும்பைக்கொடு" என்று கேட்டான். கொடுத்தவன் கெடுவிற் போய் அதைக் கேட்டதற்கு, வாங்கினவன் நான் உன் கையிலே வாங்கி

* There is a story worth telling connected with these lines.

Kamban, the translator of the Râmâyanam, and the greatest master of Tamil Rythm, passing by a tank one evening, heard a cultivator, as he watered his field, sing the line

மூங்கிலிலை மேல்,
"On the leaf of the Bambû."

The man having then completed his number of buckets of water, ceased at once his work and his song.

Kamban was struck with the line, and said to himself, "what can be on the tiny leaf of the bambû? Probably to-morrow morning the labourer will begin his work with the next line of the song. I must be there to hear it." Accordingly, with the dawn, Kamban stood on the border of the tank, and was rewarded by hearing the man, as he drew his first bucket of water, chaunt the second line

தூங்கும் பனி நீர்,
"Sleeps the little drop of dew."

Moral.—*There is plenty of poetry and sentiment in the Tamil people, if you can only get at it.*

னதில்லை என்று சாதித்தான். நியாயாதிபதியினிடத்தில் போய் பிரியாது பண்ணிக்கொண்டான். அந்த வழியாக நடந்து வந்தார்கள். இரண்டு செம்புகளில் நிறைய நீர் கொண்டுவரச்சொன்னான் (two vessels full, &c). நீ அவனிடத்தில் நெய் கடன் (observe the compound.) வாங்கினதற் குச் சந்தேகம் இல்லை. "மரத்தின் பழம் மரத்தண்டையே விழும். மூலை யில் கிள்ளாத மரம் முற்றினால் கோடரி கொண்டு வெட்டித் தள்ளவேண் டும். மலரில் மணமும், எள்ளில் எண்ணெயும், உடலில் உயிருங்கலந் ததுபோல. ஓர் ஏரிக் கரைமேலே போனான். மூக்குமேலே விரல்வைத் துப், பெருமூச்சு விட்டு, அப்படியா என்று விசனப்பட்டான்.

"நல்லார் கட் பட்ட வறுமையின் இன்னாதே, கல்லார் கட் பட்ட திரு."

With-the-good-endured than poverty bad indeed, (is) *with-the-ignorant-enjoyed wealth.*

[ண் before ப் becomes ட், page 11. (III.) f.]

——»»»«««——

Lesson 81.

Uses of the root விடு = *leave.* [68.]

254. Many of the chief difficulties in the language are connected with the peculiar use of this and the following verbs. Each sentence is a formula.

☞ It will be seen that where in English a preposition or adverb is required after a verb, the Tamil often adds an auxiliary verb. Thus, *go away* = போய் விடு.

(1.) உன் இரும்பை எலி தின்று விட்டது,
Your iron a rat has eaten UP.

(2.) அத்தருணத்திலே அவன் வந்து விட்டான்,
At that juncture he came BACK.

(3.) பருந்து எடுத்துக்கொண்டு போய் விட்டது,
A hawk having lifted up, has taken AWAY.

(4.) அவன் தன் வீட்டுக்குப் போய் விட்டான்,
He his house to went OFF.

(5.) அவர்களை அனுப்பி விட்டான்,
Them he sent AWAY.

அவர்களைக் கொஞ்சந் தூரம் வழிவிட்டனுப்பினான்,
He accompanied them a little distance on their way.

(6.) அவள் திகைத்து நின்று விட்டாள்,
She affrighted stood STILL.

(7.) ஒரு செம்பு நீர் முழுதும் விட்டுக், கழுவியும் பாதிச் சேறுயினும் போக வில்லை.

A vessel-of-water whole, having LET OUT *although* (you) *washed half the mud even has not gone.*

(8.) தேள் கொட்டி விட்டது, *the scorpion stung them* (redundant).

(9.) ஒன்பதின் ஆயிரம் வராகனை இந்தப் பிள்ளைக்குக் கொடுத்துவிடு,
Nine-thousand pagodas to this child give UP.

(10.) ஒரு நாள் இராத்திரி எல்லாம் விடா மழையாகப் பெய்து கொண்டிருந்தது. விடியற் காலத்தில் மழை விட்ட பின்பு, *for a whole night* INCESSANT *rain descended. In the morning after the rain* HAD CEASED.

(11.) முதலும் வட்டியும் கொடுத்து விடுகிறேன், *I will pay* UP *both principal and interest.*

(12.) தாரை தாரையாய்க் கண்ணீரை விட்டு அழுதான், *he wept,* SHEDDING *tears in drops.*

(13.) அதை வாங்கிப் பார்க்கிறது போலப் பக்கத்திலே மூட்டம் போட்டிருக்கிற நெருப்பிலே போட்டு விட்டான், *as though he would take it to look at it, he threw it* AWAY *into a fire which was kindled there.* Comp. LESSON 61.

(14.) அவன் வைஷ்ணவன் ஆகிவிட்டான், *he became a Vaishnavan* (redundant).

(15.) என் மேலே வருத்தத்தை வர விட்டான்,
He CAUSED *trouble to come upon me.*

(16.) அது விட்டுப் போயிற்று [போச்சு],
It has got loose.

(17.) அதை விட்டு வை, *let it alone.*

(18.) இது அவன் அறுக்கவிட்ட மரம் = *this is the tree which he brought to be sawn* [LEFT to be].

Lesson 82.

255. Uses of the root ஆடு [62.] *move, dance.* Trans. ஆட்டு. 160.

(1.) பகையாளி குடியை உறவாடிக் கெடுக்கவேண்டும்,
A hostile inhabitant *feigning intimacy* (you) *must destroy.*

[பகையாளியைக் குடி கெடுக்க விரும்பினால் உன்னைச் சிநேகிதன் என்று பாராட்டி அவனைக் கெடுக்கலாம்.]

(2.) அவனைப் புகழ்ந்து கொண்டாடினார், *he praised him and celebrated him.* (கொண்டு, ஆடு.)

(3.) வேட்டை ஆடுகையில், *while he was hunting.*

(4.) அவன் ஆடல் பாடல்களில் வல்லவன், *he is a very clever fellow in dancing and singing.*

(5.) வாணியர் எள்ளாடுஞ் செக்கை வளைய வரும் எருதுகள் போல், நீணிலத்தில் ஆலயங்கள் நித்தம் வலம் வந்தால் என்ன?

What will it profit though you for ever go round about temples from the right, in this wide world, like bullocks that go round the press in which oil-men grind the rape seed?

[நீள் + நிலம் = *the wide land.* வலம் வரு, *go round from the right side* = பிரதட்சணம் பண்ணு.]

(6.) அபசாரி ஆடுகிறது குலத்துக்கீனம் *the conduct of a licentious woman is a disgrace to her family.*

(7.) *ஆடுகிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும்; பாடுகிறமாட்டைப் பாடிக் கறக்க வேண்டும், a dancing cow you must milk dancing; and a singing cow you must milk singing.*

(You must adapt yourself to people's humour.)

(8.) *கோலாடக் குரங்காடும், when the stick dances, the monkey dances.*

(9.) *பணத்துக்காடுகிறுன், he is very urgent for money.*

(10.) *ஆட்டம் = a movement, enterprize.* 190.

அவன் அங்கே போக ஆட்டம் ஆடுகிறுன்,
He keeps trying to go there.
குரங்காட்டமாய், like a monkey.

Lesson 83.

256. Uses of the root போடு, *put.* [68.]

(1.) *கிபம் போடுகிறுன், she calumniates.*

என் மேல் பழி போட்டான், on me he put guilt.

(2.) *அவனுடைய கடுக்கன்களைக் கழற்றித் தன் காதிலே போட்டுக்கொண்டான்,*
He took off his ear-rings and put them in his own ears.

(3.) *அந்தக் கிடாரி கன்று போட்டது, that heifer has calved.*

(4.) *சமாசாரம் எழுதிப்போட்டான், he wrote off the news.*

(5.) *வருகிறவர்களுக் கெல்லாம் சாப்பாடுச் செலவும் மற்றச் செலவுகளும் நீங்களே போட்டுச் செய்ய வேண்டும், for all who come you yourselves must provide board and all other expenses.*

(6.) *கை போட்டுக்கொடு என்றுன், அப்படியே கை போட்டுக் கொடுத்தான், "Give me your hand upon it," said he; so he gave his hand upon it.*

(7.) *இதை அந்த வீட்டில் போட்டுவிட்டு, இதோ, ஒரு நொடி அளவில் வந்துவிடுகிறேன், I will just put it into that house, and be with you in an instant.*

(8.) *அடிச் சட்டிக்குள்ளே கரணம் போடலாமா? Can you make a summerset in the bottom of a pot?* [Compare also 106. 5.]

(9.) *ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு, though you throw* (money) *into the river, measure what you throw!*

(10.) *அதற்கு நாலஞ்சு வீடு போட்டு* [VULG.], *four or five doors* OFF [Perhaps for போய் விட்டு.]

Lesson 84.

257. Uses of the root பிற, *be born.* [66.]

(1.) *நியாயாதிபதிக்குச் சந்தேகம் பிறந்து மறுநாள் வரச் சொன்னுன், the judge began to doubt and told him to come to-morrow.*

(2.) *ஆகாயத்திலிருந்து ஒரு வாக்குப் பிறந்தது, a voice was heard from the sky.*

(3.) ஒவ்வொரு வேளைகளிலே அருள் வாக்குப் பிறக்கும், *every now and then a gracious word proceeds forth.*

(4.) ஒரு உடன்படிக்கையைப் பிறப்பிவித்துக் கொண்டார்கள், *they caused an agreement to be made* (double causal. பி and வி [160. 92.])

(5.) அவன் வாயிலிருந்து பிறக்கிற வார்த்தை எல்லாம் பொய், *every word that comes out of his mouth is false.*

(6.) எசமான் உத்தரவு பிறந்தால் செய்யலாம், *if the master's order be forth coming* (you) *may do it.*

(7.) எசமானுக்கு அவன் மேலே அதிக விசுவாசம் பிறந்தது, *the master took a great fancy to him.*

Lesson 85.

258. Uses of the roots போ, *go*, and போக்கு. [58. 160.]

(1.) அவனுடைய அதிக ஆசை பயன்படாமற் போயிற்று,
(His excessive lust not bringing benefit went.)
His excessive desire was utterly unproductive.

(2.) அந்த மந்தைப் பசுக்கள் எல்லாம் இறந்து போயின, *all the cows in that herd died* (went dead).

(3.) அவனுக்குச் சரிபோனபடி எல்லாம் செய், *do as seems good to him.*

(4.) மோசம் போனோம், *we are cheated.*

(5.) அவன் என்னை மோசம் போக்கினான், *he cheated me (*போக்கு [56. II.] is a causal transitive verb, from போ*).*

சூதாடுவதில் பொழுது போக்கினான், *he wasted his time in gaming.*

(6.) போக்கடி பிடித்தான், *he followed his track* போக்கு, அடி = *the step in which* (he) *went).*

(7.) யாதொன்று போயிற்றோ அதை மறுபடி சேகரிக்க வேண்டும், *if any thing be lost it must be acquired again.*

அவனுடைய பொருள் எல்லாம் அநியாயமாய்ப் போயிற்று, *all his substance unjustly was lost.*

(8.) எனக்கிருக்கிற சிநேகம் போகாது, *my friendship will not cease.*

(9.) அந்தப் பேச்சுப் போகட்டும்: வேறே பேச்சுப் பேசு, *let that proposition alone: turn to something else.*

[போ means *go, leave, be lost, depart, cease to be.* Added to intransitive verbs it often gives the idea of completeness:

வாடிப் போயிற்று, *it is faded.*
அழிந்து போயிற்று, *it is destroyed.*]

(10.) அந்த நிலம் போக மற்ற நிலம் என்னுடையது, *setting aside that land the rest is mine* (that land to go).

(11.) இருட்டைப் போக்கடிக்க விளக்கு இருக்கிறது,
There is a light to scatter the darkness.

(12.) இனி நாக்கே போமோ? மூக்கே போமோ?
Shall I lose my tongue? or my nose?

(13.) அவளைப்பார்த்துக் கொண்டே செய்தேன். அதினாலே குடம் பெரிதாகப் போயிற்று என்று குசவன் சொன்னான், *"I did it while looking at her, and so the vessel became too large," said the potter.*

(14.) அவன் நித்திரை போனான், *he has gone to sleep.*

[Compare also 32. 58. 124.]

Lesson 86.

259. Uses of the root கொள்ளு, *obtain, take to one's self* [56. (III.).]

(1.) விழித்துக் கொண்டேன், *I awoke.*

(2.) பார்த்துக் கொள்ளச் சொன்னான், *he told me to beware, to watch, look out.*

(3.) போட்டுக் கொண்டான், *he put on* (himself).

(4.) வைத்துக் கொண்டிருந்தான், *he had stored up.*

(5.) சொல்லிக் கொண்டான், *they were talking* (among themselves).

(6.) அந்தக் கடாரிகள் கறந்துகொண்டிருந்தன, *those heifers were in milk.*

(7.) அதன்மேல் ஆசைகொண்டான், *he placed his desire upon it.*

(8.) அவனைப்போலே ரூபங் கொண்டான், *he assumed a shape like him.*

(9.) தலை இறங்கிக் கொண்டு சும்மா இருந்தான், *he was silent, hanging down his head.*

(10.) கோபங் கொண்டார், *he became angry.*

(11.) விடாமழையாகப் பெய்து கொண்டிருந்தது, *it was raining incessantly.*

(12.) மிகுந்த வணக்கத்துடனே கேட்டுக் கொண்டான், *he asked with much respect.*

(13.) அவன் அதைச் சொன்னது முதல்கொண்டு இதுவரையிலும்,
From the time he said that *until now.*

(முதல்கொண்டு *having* (that) *for a beginning = from that time*).

(14.) மாங்கனியைக் கைக்கொண்டு இங்கே வந்தான்,
Taking in his hand the mango fruit he came here.

(15.) அவர் விவாகம் பண்ணினார், *he married* (as a minister).
அவர் விவாகம் பண்ணிக்கொண்டார், *he got married.*

[Compare also 106. (4.)]

(16.) அவரைச் சிநேகம் பண்ணிக்கொள்வேன், *I will cultivate his friendship.*

Lesson 87.

260. Uses of the root காண், *see.* [70.]

(1.) அந்த விவரங்களைக் கண்டு ஒரு உடன்படிக்கை பண்ணினார்கள், *they made an agreement in which these particulars were included.*

(2.) *அம்மையார் நூற்கிற நூல் கிழவனாருடைய அரைஞாணுக்குக் காணாது, the thread which the old lady spins will not suffice for a waist-string for the old gentleman.*

(3.) ஒரு மந்தையிடத்துக்குப் "போய் இடையனைக் கண்டு, பசுவேண்டும், அகப்படுமா" என்றார்கள், *they went to the flock and said to the herdsman, "we want a cow, can it be had?"*

(4.) எப்படிக்கண்டு பிடிப்பேன்? [to கண்டடைகிறது to him.]
How can I find it? [see and take it.]

(5.) அவனுக்கு ஜலதோஷமும் காய்ச்சலும் கண்டு மிகவும் வருத்தப்பட்டான், *he got a cold and fever, and was very poorly.*

(6.) இதை அவர் கையில் கொடுத்துக் கண்டு கொண்டுவா!
Take that in your hand and go to visit him.

(7.) என்னைக் காணாமல் செய்தான், *he did it when I was not there to see* (lit. *not seeing me he did it*).

(8.) என்ன காணும்! *What is that* (an interjection. [214. 193.]) !

Lesson 88.

261. Uses of the root வை, *Place.* [64.]

(1.) *என்னைக் கட்டிவைத்து நீ போ, tie me up and go yourself* (redundant).

(2.) பொதியோடு வைத்துக் கொண்டு பிச்சைக்கும் போனசம்பந்தமாய் இருக்கிறது, *it is like the man who stored up his wealth in sacks and yet went a begging.*

(3.) இவர்களைச் சாப்பிட்டு வரும்படி அனுப்பிவையும், *send him to eat* [probably a corruption of அனுப்புவியும் the causal (160.)]

(4.) *தீ மிஞ்ச வைத்தாலும் பகை மிஞ்ச வைக்கலாகாது, although you allow fire to increase don't allow hatred to increase.*

(5.) என் பேரிலே கோபம் வைக்காதே, *don't be angry with me!*

(6.) *அவன் வீட்டுக்கு அடி வைக்கிறதில்லை, I shall not tread his threshold.*

(7.) *அட்டையை எடுத்து மெத்தையில் வைத்தாலும் செற்றையைச் செற்றையை நாடும், though you take a woodlouse and put it on a bed it will seek the rubbish heap.*

(8.) *அந்தக்காரியத்தை மூடிவைத்தால் வெளிப்படாதோ? If you cover that affair will it not come abroad?*

(9.) *அண்டத்தைக் கையிலே வைத்தாட்டுவானுக்குச் சுண்டைக்காய் மெத்தப் பாரமா? To him who bears the globe in his hand and moves it, is a chundê fruit a great weight?*

(10.) *வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை, if you preserve it— a tuft; if you shave it—baldness.* (= I am in your power.)

(11.) *அவனுக்கு வெடிவைத்திருக்கிறான், he is lying in wait for him* (lit. a shot he has placed for him).

(12.) *அவளை வைத்திருக்கிறான், he keeps her* (improperly).

Lesson 89.

262. Idiomatic uses of root படு, *suffer*. [56. (II.).]

(1.) *அயோத்தியாபுரி ஆளப்பட்ட திரிசங்கு குமாரனாகிய அரிச்சந்திரமகாராசன், Harischandra, the great king, son of Trisangu who reigned over Oude. (ஆளப் பட்ட* for *ஆண்ட.)*

(2.) *புறப்பட்டுப் போனார்கள், they set out. (படு* with what we should call an adverb: *புறம்.)*

(3.) *கேள்விப்பட்டேன், I heard it. (படு* with a noun.)

(4.) *அவன் தலை அம்மிக்கல்லிலே பட்டு உடைந்தது, his head struck against the grinding stone and was broken.*

(5.) *அதற்கு அவர்கள் உடன்பட்டார்கள், they agreed to it. (படு* with what is equivalent to a preposition.)

(6.) ௰௨-*அடி நீ பட்டுக்கொள், you shall suffer twelve stripes.*

(7.) *உரலில் அகப்பட்டவை உலக்கைக்குத் தப்புமா? Can the things which have got into the mortar escape the pestle?*

(8.) *மனையின் வாழ்வென்னும் வலையில் விழுந்த மானைப்போல் பிடிபட்டான், like a hart caught in the toils he has fallen into the net of domestic felicity.*

படு with a verbal root = *பிடிக்கப்பட்டான்.*

(9.) *காலடி பிட்டத்தில் படும்படியாக ஓடினான், he ran so that his heels touched his hinders.*

(10.) *உபாயத்தினால் எல்லாம் கைவசப்படும், all may be accomplished by stratagem. (கையினுடைய வசத்திலே படும்.)*

[Compare also 92. 161.]

Lesson 90.

263. Uses of the root இடு, *give.* [68.]

(1.) *பங்கிட்டுக் கொள்ளட்டும், let them divide it among themselves.*

[*பங்கு இடுகிறது.*
a part *to give*
கொள்ள gives the idea of, *among themselves.*]

(2.) *தன் பெண்சாதியை இட்டுக்கொண்டு போனான், he took his wife away.*
தன் மகனை இட்டுவந்தான், he brought his son with him.

[Here *இட்டு* is used for *taking with one, giving the hand to one.*]

(3.) *பெருவழக்கிட்டுச் சொல்லுகிறீர்கள், you are making a great complaint of it.*

[Here *இட்டு* = *making, giving out.*]

(4.) *அவர் அப்படி எண்ணம் இட்டுக் கொண்டிருக்கையில்,*
While he was thus thinking in his mind.

[Here *இட்டு* = *turning over, giving it his thoughts.*]

(5.) *பின்னிட்டுப் போகும்படி செய்தான், he made* (them) *turn back.*
முன்னிட்டகாலைப் பின்னிட்டுத் திரும்பினான், he drew back the foot that he had advanced and turned back.

(6.) *மிகுந்த கூச்சல் இட்டான், he made a great row.*

(7.) *நேரிட்ட வழியைப் பற்றிப் போனார்கள், he went in the way that first presented itself. (நேர்* opposite.)

(8.) *கதவைமூடிப் பூட்டிட்டு வெளியில் வந்தான்,*
He shut the door, locked it and came out. (பூட்டு இடு.)

[Here இட்டு seems redundant or else = *up: he locked it up.* This is very common.]

(9.) *குற்றங் குறையக் குணம் மேவிட அருளை*
50. 168. , ,
உற்றவரே! ஆவிக்குறவாம் பராபரனே!
87. 74.

O, thou, who possessest grace by which my faults diminish, and good dispositions increase within me! O God, kin of my soul!

[மேல் + இடு *increase.* *உற்றவர்* from *உறு*, *be, possess.* Not very common. குணம், used for *நற்குணம்.* *உறவு, relationship,* used for *உறவன், a relation.*]

(10.) *அதை முன்னிட்டுக்கொண்டு அவரிடத்தில் போவேன், I will make that a pretext for going to him.*

(11.) *அன்னம் இட்ட வீட்டில் கன்னம் இடலாமா? Is it right to steal from a house where they have supplied us with food?*

(12.) என் மந்தையிலே ஒரு பசு சதைபிடித்து மேனி இட்டிருக்கிறது,
In my herd a cow has picked up in flesh and increased in size.

(Here பிடி also is used idiomatically.)

(13.) *இப்படிக் கட்டளை இட்டருளும்!* [68.] *Grant me this! (Thus graciously give command.)*

(14.) *கை நடுங்கி, மெய் நடுங்கி, வாய் குழறி வீரிட்டழுது கொண்டாள், with trembling hand, and trembling body, and stammering lips, she screamed aloud and wept.*

[வீர், a mere imitative word.]

Lesson 91.

264. Uses of the root *அருள், grant.* (62.)

(1.) *தன்னிருப்பிடத்திற்கு எழுந்தருளினார், he ascended benignant to his seat.*

(2.) *சுவாமி! எனக்கு ஒரு நல் வாக்கு! அருளவேண்டும், sir, you must grant me a favorable reply.*

(3.) *புத்திரசந்தானம் அருளவேண்டும் என்று தவம் பண்ணினான், he performed penances praying for male issue.*

(4.) *சிம்மாசனத்தில் வீற்றிருந்தருளினான், he arose and seated himself on his throne.*

(5.) *சுவாமி அவர்கள் கற்பித்தருளியபடியே நடந்துகொண்டு போதாநின்றேன், as my Lord shall please to direct I will conduct myself.*

[Here *போதா நின்றேன் = வருகிறேன்.* The verb is *போது-கிறது* — but the strictly poetical form, *போதா நின்றேன் = போதுகிறேன்,* is used. Com. 33.]

Lesson 92.

265. Use of the root உண், *eat.* (56. III.)

(1.) வெட்டுண்டார்கள், *they were cut down.*

(2.) தூணில் கட்டுண்டவள், *she who was tied to a pillar.*

(3.) அமுதம் உண்கிற நாவினாலே விஷம் உண்பாரோ? *Will they eat poison with the tongue that eats ambrosia?*

(4.) மை கொட்டுண்டு போயிற்று, *the ink is spilled.*

(5.) முட்டுண்டு குனியாதே, *don't stoop after you've hit your head.*

(6.) ஆசைகொண்டு அலையுண்டு திரிகிறான், *he goes about distracted by his desires.*

[உண்டு is either = 1. *There is* (43.), or 2. *having eaten*—p. verb. part. of உண், *eat* (56. (III.), or 3. it is used for the passive and so equivalent to படு. In this case உண்டு is added to the root. Com. 133.]

Lesson 93.

266. Uses of the root அடி, *beat.* (64.)

(1.) இம்மூன்று பேரையும் மொட்டை அடித்துத் துரத்தி விடவேண்டும், *shave these three persons bare and send them away.*

(2.) அடியாத நாடு படியாது, *a country which has not suffered, will not learn.*

(3.) இன்றைக்காகட்டும் நாளைக்காகட்டும் என்று அலை அடிக்கிறான், *to day! to-morrow! saying, he causes me to dance attendance* (அலைய, *to wander.* அடிக்கிறான், *he knocks me about.* ய omitted.)

(4.) அவன் பிரசங்கிக்கிறதற்கு முன்னே ஒருவரும் தர்க்கம் பண்ணாமல் அடித்துப் போடுவான், *by his preaching he shuts the mouths of gainsayers.*

(5.) பெருமழை அடிக்கிறபோது குளிராது; சிறு தூற்றல் தூறும்போது குளிரும், *it does not grow cool when heavy rain falls, but when gentle showers fall.*

(6.) குதிரையைச் சவாரி அடிக்கிறான், *he rides the horse.*

(7.) ஒரு சால் அடிப்பேன், இரண்டு சால் அடிப்பேன், சும்மா மடக்கி மடக்கி அடிக்க என்னால் ஆகாது, *I will plough the land once, or even twice; but uselessly again and again I cannot plough it.* (Here அடி probably refers to the bullocks that draw the plough.)

(8.) அவ்வளவு சாதமும் கறியும் இரண்டு வாயிலே பூராவாய் அடித்துப்போட்டான், *all that rice and curry in two mouthfuls he ate up.*

(9.) அந்தக் கடையைக் கொள்ளை அடித்துக் கொண்டுபோய் விட்டார்கள், *they robbed that bazaar.*

Lesson 94.

267. Some idiomatic uses of the relative and adverbial participles. [25.]

(1.) அவன் வருகிற குறிப்பு, *the sign of his coming.*

(2.) நீ இறைக்கிற ஏற்றம், *the picota with which you are drawing water.*

(3.) மணி கட்டுகிற காரணம் என்ன? *Why do you tie the bell?*

(4.) *தன்னை அடித்த அடியைக் காட்டினான், he showed the stripes he had suffered.*

(5.) *பால்கறந்த பசு, a cow in milk.*

(6.) *நடக்கிற வேலை எப்படியும் நடக்கும், an affair which is predestined will happen any how.*

(7.) *அந்த வீடு கட்டின பணம் இன்னஞ் செல்லவில்லை, the money expended in building that house is not yet paid.*

(8.) *அதை அறிகிற அறிவு, the knowledge of that.*
So *உணருகிற உணர்வு, the feeling of a thing.*

(9.) *இவன் வருகிற தேதி, the day of his coming.*

[This is quite idiomatic.]

(10.) *ஆனமுதலில் அதிகஞ் செலவாகிறது சரியல்ல,*
It is not right that the expenditure should be greater than the capital.

[*ஆன = which has become. முதல் = capital.*]

(11.) *பிள்ளைகள் இருந்து ஆவதென்ன? What is the use of their existence?*

[For இருந்ததினால்.—It is a gerund.]

So, பால் கொடாத எருமைகளைக் காப்பாற்றிப் பலன் உண்டா? Is there any use in keeping buffaloes that yield no milk?

——⋙◆⋘——

Lesson 95.

Idiomatic uses of the root ஆகு. [58.]

268. Many of these have been illustrated fully in the foregoing lessons. It may be well to collect and exhibit a few of them in one lesson.

(1.) *செய்யவேண்டியதெல்லாம் செய்தாயிற்று (செய்தாச்சு), all is done that was to be done.*

ஆயிற்று = முடிந்தது, is finished, completed. கெடு ஆய்விட்டது, the time is up.

(2.) *ஒருவனுடைய குணத்தை அறிகிறதற்கு முன்னே அவனுடனே சகவாசம் பண்ணல் ஆகாது, before knowing a man's disposition to associate with him it is unfit.*

So, இருக்கலாகாது, it ought not to be.

[Here *ஆகாது = தகாது, it is not proper, fit.*]

சொல்லலாமா? சொல்லலாம்; சொல்லலாகாது.
May one say? One may say; one may not say.

(3.) *கெடு ஆன உடனே ஏன் அதைத் திருப்பிக் கொள்ளவில்லை? Why did not you redeem it as soon as the date was expired.*

(4.) *காற்றாய்ப் பறந்தான், he flew like the wind?*

[ஆய் = ஆகி verb. part. See. 40.]

Lesson 96.

269. Idiomatic uses of the tenses.

(1.) *அவள் குடித்தனத் திறமை இல்லாதவள் என்று அறிந்தேன்.*
"She (is) *domestic affairs' ability, one who is without," I have discovered.*

கடவுள் எங்கும் இருக்கிறார், God is every where.

(Past for present.)

(2.) *நீ இப்படிச் செய்வாய் ஆனால் செத்தாய், if you do so you are dead man.*

(3.) *நீ கேட்ட வரத்தைக் கொடுத்தேன், your request is granted.*

(Present for future.)

(4.) *எட்டு நாளையிலே பிடித்துக் கொடுக்கிறேன், I will find it out for you in eight days.*

(5.) *நான் செயித்து வருகிறேன் என்றான், "I will immediately conquer and return,"* said he. [Com. *வாறேன், வாறேன்.*]

(Future to denote custom.)

(6.) *என்னைத் தன் மந்தையைப் பார்த்துக்கொள்ளச் சொல்லுவான், he tells me to mind his herd.*

(7.) *எப்போதும் அதிசயத்தைப் பார்த்துக் கொண்டு திரிவான், he is always going about seeking the wonderful.*

(8.) *முன்னோர்கள் அப்படிச் சொல்லுவார்கள், our ancestors said so.*

(Future for imperative.)

(9.) *இப்படிச் செய்வாய், do this!*

☞ *(a.)* The past is used for the present in some few cases idiomatically and to indicate *certainty.*

(b.) The present is used for the future to indicate *certainty.*

(c.) The future is used often to express *a habit* or any thing *customary.*

(d.) The future is used, as in English, *politely for the imperative.* This is especially common in poetry. (Com. 140. c.)

Lesson 97.

Some poetical forms and idioms.

270. The object of this work is to teach the common Tamil, as spoken by all classes of the people. There are certain poetical forms which must be understood before the learner can read the two little works

called ஆத்திசூடி, and கொன்றை வேய்ந்தன், by the poetess Avveiyâr * These will be illustrated here. All other poetical forms and idioms must be reserved till the learner is able to read the IIIrd Grammar, where he will find a full explanation of every poetical form and idiom.

(1.) In beginning the study of Tamil poetry, the learner must remark that the signs of the cases are *very commonly elided.* This is called வேற்றுமைத் தொகை (வேற்றுமை *a casal termination,* தொகை *ellipsis.* III Gram. 152.).

அறஞ் செய விரும்பு (for அறத்தை).
Virtue to do desire.

பருவத்தே பயிர்செய், cultivate in the season (பருவத்து, from பருவம், *a season,* is prepared according to 18 for the reception of the casal sign, which is omitted and எ emphatic, inserted).

(2.) Letters are constantly omitted whenever the rhythm requires it. In the above செய் is for செய்ய.† Comp. III Gram. 41.

(3.) Participial nouns, and appellatives (185.) are very frequently introduced.

ஆறுவது சினம் (ஆறு, 56. II. *grow cool.* fut. part. noun, neut. sing. 88.), *that which will* (must) *grow cool* (is) *anger.*

ஊக்கமது (a neut. appellative for ஊக்கம், *energy), that which belongs to energetic action.*

(4.) A negative imperative is often found, which is not at all used in common Tamil.

கரவேல் (கர *hide* + வ் + ஏல்); விலக்கேல் (விலக்கு, *remove*); விளம்பேல் (விளம்பு, *reveal*); விடேல் (விடு, *leave*); இகழேல் (இகழ், *despise*), *do not hide, remove,* &c. &c.

ஏல் (a lengthened form of அல், *not*) is added to the root of verbs which form their present with கிறு; and those which form the present with க்கிறு insert க். [III Gram. 92.]

* The traditions current among the Tamil people, regarding the "wonderful old woman" are very numerous.

She was one day sitting in the porch of a temple with her feet stretched out straight before her—not considered to be a very respectful position in the presence of a superior.

The officiating priest rushed out to her with the question, "*are you not ashamed to stretch out your feet in the presence of the Sâmi?* சாமி இருக்கிற இடத்தில் கால் நீட்ட வெட்கமில்லையா?"

To which she replied: மெய்தான், ஐயா! சாமி இல்லாத இடத்தைக் காண்பித்தால் அங்கேபோய்க் கால் நீட்டுகிறேன்: *Very true sir! if you will show me where the Sâmi* (Lord) *is not, I will go and stretch out my feet there.*"

† An amusing story turns on this:

A learned man presented himself before அதிவீரராம பாண்டியன், a celebrated King, himself a poet of no mean ability, and when the king demanded the reason of his coming he replied:

"தங்களை புத்தியிலாதவன் என்று அறிந்து வந்தேன்."
Your majesty a senseless man — knowing I came.

The courtiers stood aghast. The king smiled and liberally rewarded the visitor. But why? இலாதவன் = இல்லாதவன் *one who is without,* and thus புத்தியில்லாதவன் = one who is senseless. But also புத்தியில் = *in sense,* and ஆதவன் = *a sun*: a high poetical word.

(5.) The root of a verb is frequently prefixed to a noun and forms with it a compound. This is called *வினைத்தொகை* (*வினை* verb, *தொகை* ellipsis, an ellipsis of the peculiar inflection of the verb).

செய்வினை திருந்தச் செய் (*செய்*, the root used for *செய்கிற* or *செய்யும் 74*). [III Gram. 153.]

(The work which you do, to be accurate, do.)

What you do, do well.

Sometimes a letter is introduced for the sake of euphony.

சேர்விடம் அறிந்து சேர் (*சேர், வ், இடம்*, here the *வ்* may serve to express a future idea.)

(The place to be approached, having known, approach.)
Having first ascertained the fit place for you to be in, take up your abode in it.

This is a very common idiom. Thus *வாழ்நாள்* (for *வாழுகிற* or *வாழும் நாள்*) *life-time.*

(6.) The *சாரியை* or particle *அத்து* is used instead of a casal termination: thus,

சான்றோர் இனத்திரு, join thyself to the assembly of the worthy (*சான்றோருடைய, இனத்து = இனத்தினிடத்திலே, இரு*). [III Gram. 108.]

(7.) *தன்* is inserted before the terminatiom of a case: thus,

கைப்	*பொருடன்னின்*	*மெய்ப்*	*பொருள்*	*கல்வி,*
Hand	*wealth than,*	*true*	*wealth* (is)	*learning.*

Here, for *பொருளின் = than wealth* (21.), *பொருள் + தன் + இன்* is used (*ள்* and *த்* coalesce in *ட்*).

Lesson 98.

271. (1.) Cautions useful in translating into Tamil.

Your perishing body—is not, *உன் அழிந்துபோகிற சரீரம்*, but *அழிவுள்ள உன்னுடைய சரீரம்* or *அழிவுள்ளதாகிய உன் சரீரம்.*

The adj. pronoun comes before its noun.

(2.) Do not think you may use the passive form (*படு*) wherever it occurs in English. Thus.

(a.) He ordered it to be given to her. Not *அவளுக்கு அது கொடுக்கப்படச் சொன்னார்*, but *அவளுக்கு அதைக் கொடுக்கச்சொன்னார்.*

(b.) சுவரில் எழுதிய சித்திரம் போலச் சற்றும் அசையாது நின்று கல்லுங் கரைந் துருகப் பாடினாள், like a picture painted on a wall, not moving in the least, she sang so that a stone even would be melted. (Not *எழுதப்பட்ட.*)

(c.) காம்பரிந்த புஷ்பங்கள், flowers whose stalks are cut off. (Not *அரியப்பட்ட.*)

(3.) Do not think it necessary always to find a word, for "*a*," "*an*" or "the" in translating.

This is a tree, இது மரம் தான். Not *இது ஒரு மரமாய் இருக்கிறது.*

This is the man I spoke of, நான் சொன்ன மனிதன் இவன்தான்.

(4.) "*His*, &c." may often be omitted, as in Greek.

The boy learns his lesson, பையன் பாடம் படிக்கிறான். Not *அந்தப் பையன் தன் பாடம் படிக்கிறான்.*

She is gone to her house, அவள் வீட்டுக்குப் போய்விட்டாள். Not தன்னுடைய வீட்டுக்கு.

(5.) *I have.* Not நான் உடையவனாய் இருக்கிறேன், but எனக்கு உண்டு "Est pro habeo, &c."

(6.) *He told me who it was that did so,* இப்படிச் செய்தவன் இன்னான் என்று எனக்கு அறிவித்தான். Not இப்படிச் செய்தவன் ஆர் என்று.

(7.) *He said he would come,* வருவேன் என்று சொன்னான் or தான் வருவதாகச் சொன்னான். Not வருவான் என்று சொன்னான்.

(8.) A new nominative should not come in between the verbal participle and the finite verb that completes a sentence. Thus,

The lawyer stated their case and the judge acquitted them, வக்கீல் அவர்களுடைய சங்கதியைப்பேசி, நியாயாதிபதி இவர்கள் பேரில் குற்றமில்லை என்று தீர்த்தார்.

This is incorrect. Render it rather thus:

வக்கீல் அவர்களுடைய சங்கதியைப் பேச (or பேசினபின்பு or பேசினான்,) நியாயாதிபதி, &c.

RULE.—Whatever number of verbal participles may come in a sentence they have all the same nominative as the final verb.

(9.) Idiomatic expressions must not be rendered literally, in general. "*A watery grave*" is good English; தண்ணீருள்ள பிரேதக் குழி is ridiculous. தண்ணீரில் அமிழ்ந்தி இறந்தான் is Tamil.

(10.) *He told me how to act.* Not எப்படிச் செய்யவேண்டும் என்று சொன்னார்; but இன்னவிதமாகச் செய்ய வேண்டும் என்று கற்பித்தார்; or செய்யவேண்டிய விதத்தை எனக்குக் கட்டளை இட்டார்.

(11.) It is not always sufficient to translate the English infinitive mood by the Tamil infinitive.

Thus, என்னைக் காண வந்தார்கள், *they came to see me,* is correct. But, "*It is not right to do so,*" is not, அப்படிச் செய்யச் சரி அல்ல, but அப்படிச் செய்வது சரி அல்ல.

The infinitive in English is a noun also.

These cautions might be multiplied indefinitely; there is but room, however, to add one general piece of advice: analyze well whatever you wish to put into Tamil. Break it up into shorter sentences if necessary. Transfuse ideas rather than translate words. Never be content till the whole meaning is fully brought out in your version. Then reconsider your MS. with a view to abridgment and condensation.

Lesson 99.

272. Hints regarding translation from English into Tamil.

Beschi well says, "sæpe dicimus latina verba, non latine; et sæpius europeam linguam loquimur tamulicis verbis." We often use latin words without the latin idiom, and still more frequently do, we clothe European idiom in Tamil words. The mind must be to a great extent imbued with Tamil habits of thought before a man can speak idiomatically. When the learner has with great labour and study acquired the habit of thinking in Tamil, he may hope to speak the language well; but not till

then. Extensive reading and constant intercourse with natives are essentially necessary to him who would excel.

A few examples will serve to aid the learner in translating.

(I.) "Heaven is that fold of the Great Shepherd into which no enemy enters, and from which no friend departs."—*Bishop Horne.*

And, first, as to the words: "*Heaven*" is best rendered here by *பரமண்டலம் (the other sphere);* for this indicates *a place,* which the sense requires, and not* *a state,* which மோட்சம் *(liberation)* signifies.

Fold, மந்தை, தொழுவம். The former means the *herd* or *flock* rather; the latter *that in which they are enclosed.*

Great, பெரிய means this; but *மகா, பரம, சிரேட்ட, உன்னத, பிரதான* are all words not inapplicable.

Shepherd, மேய்ப்பர், *one who feeds.* Not *இடையன், a name for the caste.*

Enemy, சத்துரு or *பகைவன் (விரோதி, an opponent, எதிராளி, an adversary), பகைக்கிறவன்.*

Enter, உட்பிரவேசி (56. III.), புகு (56. II.), நுழை (56. I.), *creep in,* சேரு (56. I.), *draw near.*

Friend, சிநேகிதன் *(மித்துரு* is opposed to *சத்துரு; அன்புள்ளவன்* to *பகைவன்),* நேசிக்கிறவன்.

Depart, விட்டுவிடு, போய்விடு, பிரிந்துபோ, விட்டுப்போ, விட்டு நீங்கு (56. II.).

Then, the construction, if exact, will require the relative participle, and will run thus:

"Heaven. . .no enemy entering, and no friend departing. . .of the great shepherd . . .the fold. . .is."—Otherwise, "*Heaven is the fold of the great Shepherd. No enemy enters it; no friend departs from it.*"

1. பரமண்டலமானது / மோட்சமானது } சத்துரு ஒருவனும் உட் பிரவேசியாததும், { மித்துரு / சிநேகிதன் } ஒருவனும் விட்டுப் போகாததுமான பிரதான மேய்ப்பருடைய { மந்தை ஆம் or தொழுவம் ஆம்.

2. பரமண்டலமானது பெரிய மேய்ப்பருடைய மந்தை. அதில் பகைக்கிறவன் நுழைவதும் இல்லை. நேசிக்கிறவன் பிரிந்து போவதும் இல்லை.

3. மோட்சம் பரம மேய்ப்பரின் மந்தையாம்: அங்கே ஒருபகைவனுஞ் சேர்வது இல்லை, ஒருசிநேகிதனும் விட்டு நீங்குவது இல்லை.

4. மோட்சமானது எதற்கு ஒப்பனையாம் என்றால், பெரிய மேய்ப்பருடைய தொழுவத்துக்கு ஒப்பாகும். அதிலே பகைக்கிறவர்கள் வந்துசேரவும் மாட்டார்கள். நேசிக்கிறவர்கள் பிரிந்துபோகவும் மாட்டார்கள்.

(II.) "He is the freeman whom the Truth makes free,
And all are slaves besides."—*Cowper.*

WORDS.—*Freeman, சுயாதீனன் = one who rests on his own foundation.*

விடுதலையானவன், விடுதலை அடைந்தவன் = one who has obtained release.

விடுவிக்கப்பட்டவன், = one who has been released.

தன்னிச்சைக்காரன், = one who lives as he likes.

Truth, சத்தியம், மெய், உண்மை.

Slave, அடிமை = a bond slave.

கட்டுண்டவன் = one who is bound.

சிறை = a captive.

CONSTRUCTION.

By truth—made-freeman—freeman is; all else slaves are.

1. *சத்தியத்தால் விடுவிக்கப்பட்டவனே விடுதலையானவன்; மற்றெல்லாரும் கட்டுண்டவர்கள்.*

2. *சத்தியம் எவனை விடுதலை ஆக்கினதோ அவனே விடுதலை பெற்றவன்; மற்றயாவரும் சிறைகள்தான்.*

3. *சத்தியத்தால் சிறை நீங்கினவன், சிறை நீங்கினான்; மற்றயாவரும் சிறைப்பட்டவர்கள்தான்.*

4. *உண்மை அறிவினால் விடுதலை அடைந்தவனே விடுதலை அடைந்தவன்; மற்றெல்லாரும் அடிமைகளாய் இருக்கிறார்கள்.*

(III.) Vanitas est, longam vitam optare, et de bonâ vitâ parum curare.
It is vanity to desire to live long, and to care too little about living well.

WORDS.—*Vanity*, மாய்கை. அவத்தம், *falsehood.* வீண், *vain.* வீண்காரியம், *a vain thing.*

Life, சீவன், ஆயுசு. The former, *life itself;* the other, *life time.*
சீவகாலம், *life time* (but not pure Tamil), வாழ்நாள், *happy days.*

Long, நீளமான, நீண்ட, நீட்டமான, நெடிய, நெடு,
தீர்க்காயிசு, Sanskrit = *long life.* பூரண ஆயிசு = *full age.*

Desire, விரும்பு (கிறது,) ஆசி(க்கிறது,)வேண்டு(கிறது,)கோரு(கிறது,)வாஞ்சி (க்கிறது,) *Care*, கவலைப்படு (கிறது.)

Well, நன்றாய், செம்மையாய் (நல்லவனாய் = *as a good man*), நல்வழியில், *in a good way.*

To live, நட (க்கிறது,) ஒழுகு (கிறது.)

CONSTRUCTION.

About a good life, or living well—not caring—a long life **(to live long)—*to desire is vanity.***

1. *நல்லவனாய் வாழ்வதைக் குறித்துக் கவலைப்படாமல், தீர்க்காயுசுள்ளவனாய் வாழ வேண்டும் என்று* (may be omitted).

விரும்புவது	வீண்.
விரும்புகிறது	வீண்காரியம்.
ஆசிக்கிறது	விருதாவாம்.
ஆசிப்பது	மாய்கையாம்.

2. *நெடுநாளாய்ப் பிழைக்கவேண்டி, நன்றாய்ப் பிழைக்க நாடாமல் இருப்பது மாய்கை.* Here *நன்றாய்ப் பிழைக்க* is literal and, in Tamil, unmeaning.

3. *பூரண ஆயுசு விரும்பித் தேவபத்தியுள்ள ஆயுசு மறந்து விடுவது விருதாவாம்.* (Rather foreign.)

4. *நன்மை நிறைந்த நாளாய் வாழவிரும்பாமல் நீண்டநாளாய் வாழ விரும்புவது அபத்தம்;* or *நீண்டநாளாய் வாழவிரும்பி, நன்மை நிறைந்த நாளாய் வாழ விரும்பாமல் இருப்பது வீண்.*

[*நன்மை நிறைந்த* is still ambiguous (as is the English *well*), and may refer only to *material prosperity*.]

The learner will find that this may be varied almost at pleasure, but the 1st expresses the meaning. The following verse embodies nearly the idea. It is a Kurraḷ veṉbâ

பலநாள் பெரிதோ அறஞ்செய் திலரேல்?
நலஞ்செய் பொழுதொருநாள் பெரிது.

"Are many days great if a man does not virtuous deeds? One day spent in doing good is great."

அறம், *virtue.* இலர் = இல்லாதவர், *one who is not.* செய்திலர், *one who does not do.* ஏல், if. நலம், *goodness.*

Lesson 100.

273. Imitative words like the following are in very frequent use in Tamil. Their use varies considerably in different localities.

உலை தளதள என்று கொதிக்கிறது, *the rice-pot boils with a bubbling sound.*

திடல் என்று (திடீர் என்று) கீழே விழுந்தான், *he fell down with a thump.*

சரேல் என்று இராயருக்கு முன்பாகப்போய் நின்றான், *he went direct and stood before the king.*

அந்த நாய் வாள்வாளென்று கத்துகிறது, *that dog keeps up a howl.*

சக்கரத்தைக் கிறுகிறென்று சுழற்றினான், *he turned round the wheel with a whirl.*

பிள்ளைக்குக் குதுகுதென்று காச்சல் அடிக்கிறது, *the child has a strong fever.*

கோ என்று புலம்பினான், *he wept aloud.*

தண்ணீர் குளுகுளென்றிருக்கிறது, *the water is icy cold.*

அடுக்குப் பானையைப் பூனை மடமடென்று உருட்டிவிட்டது, *the cat rolled over the pile of pots with a crash.*

தண்ணீர் மடமடென்று ஓடுகிறது, *the water runs on with a murmuring sound.*

அவன் மளமளென்று பேசினான், *he spoke very loud.*

வாய்க்காலிலே தண்ணீர் கிலு கிலு என்று ஓடுகிறது, *the water runs in the channel with a gurgling sound.*

நடுநடுங்கிப் பயந்து கூவினான், *he cried out fearing and trembling greatly.*

உடம்பெல்லாம் விடவிடென்று நடுக்கிறது, *the body trembles all over.*

அவளிடத்தில் வாய் கொடுத்தால் மொறு மொறுவென்று சண்டைப் பிடிப்பாள், *if you let her talk she will get up a terrible quarrel.*

சிலந்தியிலிருந்து சலம் கழகழென்று ஒழுகுகிறது, *the water runs freely from the ulcer.*

கோழி பிலு பிலென்று புறப்பட்டது, *the fowls came forth with a rushing noise.*

உடம்பு கதகதென்றிருக்கிறது, *the body is hot with fever.*

மழை சொளசொளவென்று பெய்தது, *the rain came down in torrents.*

தூற்றல் பொடுபொடென்று தூறுகிறது, *the shower comes rattling down.*

அவன் எந்நேரமும் சளசள என்று பேசுவான், he keeps up a continual chatter.

கணகணென்று தப்படிக்கிறான், he keeps up a drumming noise.

உடம்பு கணகணென்று காய்கிறது, the body is hot with fever.

நெஞ்சு படபடென்று துடிக்கிறது, the heart palpitates violently.

இருந்தாற்போலே இருந்து படபடென்று மழை வந்துவிட்டது, the rain came pattering down suddenly, other things continuing as they were.

பார்த்தும் பாராமல் படபடென்று பேசிவிட்டான், he seeing saw not and spoke rashly.

பிள்ளைகள் கலகலென்று படிக்கிறார்கள்,the children are reading in full chorus.

திருடன் திடுதிடென்று ஓடினான், the thief scampered off sharp.

வண்டில் கடகடென்று போகிறது, the bandy goes rattling along.

கெவுளி (கௌளி) பலபலவென்று சொல்லுகிறது, the lizard is chirping.

கால் கை எல்லாம் வெலவெலென்றிருக்கிறது, the arms and legs are all cramped.

முறுக்கு மொறுமொறென்றிருக்கிறது, the thin biscuit is very crisp.

சடசடென்று மழை அடிக்கிறது, the rain beats in violently.

உடம்பெல்லாம் வறவறென்றிருக்கிறது, the whole body is parched up.

தொண்டை கறகறென்றிருக்கிறது, the throat is parched.

உடம்பு கொதுகொதென்று காய்கிறது, the body is dry with fever.

வயிற்றினாலே கொதுகொதென்று போகிறது, the bowels are violently disturbed.

வெந்நீர் வெதுவெதென்று இறக்கிறது, the hot water is steaming.

விளாம்பழம் குடுகுடென்று ஆடுகிறது, the vilâm fruit rattles in its shell.

எப்போதும் அவன் கொடுகொடென்று பேசுகிறான், he always speaks hastily.

என்னைக் கண்டால் சிடுசிடென்று விழுகிறான், he always falls foul of me when he sees me.

வாழைப்பழம் கொழகொழென்று நைந்து போயிற்று (போச்சுது), the plantain hās gone quite bad.

அந்தப் பட்டு வழவழென்றிருக்கிறது, that silk is very soft.

அவன் காரியம் எல்லாம் வழவழ கொழகொழ; his affairs are all disordered.

அந்த விறகு புசுபுசென்று எரிந்துபோகிறது, that firewood has burnt up all at once.

அந்தத் துணி போசுபொசென்று கிழிந்துபோச்சுது, that cloth has torn (being rotten before.)

சந்தனங் கமகமென்று மணக்கிறது, the sandal yields a fragrant odour.

அந்தப்பையன் குடுகுடென்று ஓடிப்போய்விட்டான், that boy has run off sharp.

அந்தப்புடவை நன்றாய் மொசமொசென்றிருக்கிறது, that cloth is very strong and well woven.

சரசரென்று பாம்பு ஓடுகிறது, the snake glides off with a rustling noise.

எனக்குக் கிறுகிறென்று வருகிறது, I am quite bewildered, my head whirls round.

அவனுக்கு உடம்பு என்னமோ விறுவிறென்றிருக்கிறது, his body is somehow rather fat (he wants a thrashing—is insolent.)

LESSON 100.

தூங்குகையிலே பல்லைகெறுகெறென்றுகடிக்கிறான், *he grinds his teeth in his sleep.*

என்ன, சும்மா கொசுகொசென்று சொல்லுகிறான், *what! He is always whispering somewhat* (buzzing in one's ear).

எல்லாரும் மொசமொசென்று வந்து மொய்த்துக்கொண்டார்கள், *they all came clustering together thickly.*

திருடனைப்போல திறுதிறென்று விழிக்கிறான், *he looks askance like a thief.*

உடம்பு சொறுசொறென்றிருக்கிறது, *the body is all rough.*

அவனைப் பறபறென்று இழுத்துக்கொண்டு போனார்கள், *they dragged him away violently.*

என்னமோ, முணுமுணென்று ரகசியமாய்ப் பேசினார்கள், *they talked about something or other in a low mysterious way.*

இரண்டு நாழிகை மட்டும் தொணதொணென்று விடாமல் பேசினான், *for two hours he talked on incessantly.*

என்னமோ, முகம் மினுமினென்றிருக்கிறது, *the face is somehow glistening.*

கொணகொணென்று பேசுகிறான், *he talks thickly* (as one who has a cold).

அந்த விறகு சுறுசுறென்று எரியவில்லை, *that firewood does not burn briskly.*

புகை இலையை வாயிலே போட்டால் நாக்கு விறுவிறென்றிருக்கிறது, *if you put tobacco into your mouth your tongue will be burnt.*

காதிலே என்னமோ { குடுகுடென் / குருகுரென் } றிருக்கிறது, *there is a ringing in my ears.*

வயிறு பூரு பூரென்று உப்பி இருக்கிறது, *the stomach is much swollen.*

அதைத் தொட்டால் கொளகொளென்றிருக்கிறது, *if you touch it, it is soft.*

அந்த மாவு கொறகொறென்றிருக்கிறது, *that flour is coarse.*

சேறு மொதுமொதென்றிருக்கிறது, *the mud is thick and makes a noise when the foot is put in it.*

நகைகள் பளபளென்று மின்னுகிறது, *the jewels glisten very brightly.*

சந்தடி கசகசென்றிருக்கிறது, *the noise is very great.*

அகப்பட்டுக்கொண்டு குறுகுறென்று முழிக்கிறான் (விழிக்கிறான்), *he is caught and looks afraid.*

அந்த வீட்டிலே நெருப்பு சுருசுரென்று பிடித்து, பகபகென்று பற்றி, மடமடென்று எறிந்துபோச்சுது, *the fire seized that house briskly, burned brightly and the house is burnt up.*

என் வயிறு திகுதிகென்று எரிகிறது, *my stomach burns.*

மாமரத்திலே பழம் பொலபொலென்று கொட்டுண்கிறது, *from the mango tree the fruits are falling.*

லொடலொடென்று தப்படிக்கிறான், *he beats the drum with a dull sound.*

பிள்ளை குலுகுலென்று சிரிக்கிறது, *the child smiles cheerfully.*

என்னேரமும் வெடுவெடென்று பேசுகிறான், *he is always speaking sharply.*

பைகளிலிருந்து பணங்களைப் பொதபொதென்று சரித்தான், *he poured out the money from the sacks in heaps.*

அந்தப்பாதை எப்போதும் சொதசொதென்று இருக்கிறது, *that way is always muddy.*

LESSON 101.

ஆற்றிலே வெள்ளம் மொகுமொகென்று வருகிறது, *the water comes down in the river.*

மழை சளசளென்று கொட்டுகிறது, *the rain is coming down in buckets-full.*

அவன் துருதுரென்று இருக்கிறான், *he is very wild.*

அந்தப் பொடி நறநறென்றிருக்கிறது, *that powder is very coarse.*

குசுகுசென்று பேசினார்கள், *they spoke secrets.*

காப்பு கைக்குக் கொடகொடென்றிருக்கிறது, *the bracelet is slack on the hand.*

உடம்பு பசபசென்றரிக்கிறது; *the body is itching all over.*

மோதிரம் விரலுக்கு தொளதொளென்றிருக்கிறது, *the ring is loose on the finger.*

மலமலென்று கண்ணீர் விட்டழுகிறாள், *she is weeping abundantly.*

வீடெல்லாம் கொல கொலென்று பழுதாய்ப் போச்சுது, *the house is all tumbling to ruin.*

சுவரெல்லாம் உப்புபிடித்து பொல பொலென்று உதிருகிறது, *the whole wall is crumbling away with the salt air.*

அவனைக் கண்டால் கிடுகிடென்று நடுங்குகிறார்கள், *they all fear the sight of him.*

அந்த நகை தகதகென்று மின்னுகிறது, *that jewel shines very brightly.*

அவன் என்னைக் கண்டால் கடுகடென்று பேசுகிறான், *when he sees me he speaks angrily.*

துவைத்த வேஷ்டி மொறமொறென்றிருக்கிறது, *the newly washed garment is stiff.*

அவன் நன்றாய்த் தடதடென்று வாசிக்கிறான், *he reads fluently.*

மழை பெய்தபின் புல்லு பசபசென்று முளைத்திருக்கிறது, *after the rain the fields are green with grass.*

Many nouns are formed in this way:

சுறுசுறுப்பு, *diligence.* பசபசப்பு, *an itching sensation.* கடுகடுப்பு, *severity.* விறுவிறுப்பு, *a numbness of the limbs.* துடிதுடிப்பு, *palpitation.* கிறுகிறுப்பு, *giddiness.*

Lesson 101.

274. Idiomatic sentences.

(1.) பழிபாவத்துக் கஞ்சாத துஷ்டன், *the wretch who feared neither guilt nor sin.* (பழிக்கும் பாவத்துக்கும் அஞ்சாத துஷ்டன்).

(Here உம் is omitted.)

(2.) தங்களிடத்தில் இப்படி விண்ணப்பஞ் செய்யலானேன், *I have thus made my petition to your worship.*

செய்யல், *the doing.* ஆனேன், *I have become.*

(3.) In the conclusion of a letter, இப்படிக்கு stands for "*thus writes*, &c., = the old form "*this from your*" (loving friend, &c.).

(4.) *இவ்விரண்டு பேருக்கும் பேர்பாதியாகக் கொடுத்துவிடுவோம், we will give to each of these two persons half* பேர்பாதியாக = ஒவ்வொருவனுக்கும் பாதியாக.

(5.) *என் உடைமையை இப்படியாக விலைமதிக்கவும் நேரிட்டதா? Has it come to this that my goods should be so estimated?*

நேர், right in the way, direct, இடு, give, be; நேரிடு = to come to pass, happen.

(6.) *சாட்சிகளைக் கொண்டு வாதி நிசப்படுத்தினால் தண்டனைக்குள்ளாவேன், if the complainant prove it by witnesses I will be subjected to punishment.*

[*உள், within, under. ஆவேன், I shall become.*]

(7.) *தங்கள் வித்தையினுடைய அருமை பெருமைகளைக் காண்பித்தார்கள், they showed off the rareness and greatness of their learning.*

[அருமை and பெருமை joined together, and the plural termination added to the latter.]

Thus *சுகதுக்கங்கள், joys and sorrows.*

(8.) *இந்தக் குதிரைகள் என்ன விலை? What is the price of these horses.*

[An ellipsis of the 4th case.] *இந்தக் குதிரைகளுக்கு......*

(9.) *அதைச் சொல்ல வாய்வராமல் மரம்போல் நின்றான், he stood like a tree, unable to say it* [lit. *the mouth not coming*].

(10.) *மேலுக்குச் சம்மதித்தவனைப் போலச் சொன்னான், he spoke as though he approved of it* [*மேலுக்கு, outwardly*].

(11.) *காற்று விசேஷமாக கேள்விபட்டார், he heard it reported.*

[*காற்று விசேஷமாய், as a thing borne by the winds.*]

(12.) *முறை முறையாக, respectively, in order.* [Repetitions of this kind are frequent: thus, *அன்றன்று (அன்று, அன்று) day by day.*]

(13.) *செல்வம் யாவரிடத்திலும் நிலையாது, தேர்க்கால் போல் கீழ்மேலாய் வரும், prosperity stands not still with any one, but like a chariot wheel turns upside down.*

(14.) In *சிதற அடி, put to rout* (56. III.), *பறக்கடி, put to flight,* and similar forms, there is a contraction:

சிதற அடித்தான் = சிதறும்படி அடித்தான்,
பறக்க அடித்தான் = பறக்கும்படி அடித்தான். } 168. 157.

(15.) *பார்க்கப் பார்க்க மனோரம்மியமாய் வேடிக்கையாய் இருக்கும், the more one looks the more the spectacle satisfies the mind.*

(the infinitive doubled. 168. Thus, *வர வர = by degrees.)*

(16.)	*அந்த*	*மகா*	*பாதகன்*	*இன்னான்*	*என்று*	*உனக்கு*	*முன்னே*
	[*"That*	*great*	*sinner*	*such an one"*	*saying,*	*to thee*	*before*

அறிவித்தேன்,	*அல்லவா?*
I told	*did I not?*]

I told you before, did I not, who was the great sinner?

புருஷன் இன்னான் என்று குறிப்புக் காணமாட்டாமல் திகைத்தாள், she feared, not being able to point out the husband.

இன்னான் = Such an one.

(17.) இந்தநான்கும் ஒருவனிடத்தில் இருந்தால் அவன் என்ன பாடுபடான்?
If all these four be with a man what will he not suffer?

(*உம் = all.*) ☞ The idiom here is English.

(18.) *அந்தப்பிள்ளைகளைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோனான், he took the children home with him.*

(Observe the use of *அழை.*)

(19.) *யாவரும் மேலான காரியத்தையே ஆலோசிக்க வேண்டும், அது கைகூடாவிட்டாலும் பெருமைவரும், all must meditate great things. •If they are unattainable still greatness will be the result.*

(20.) *நீர் சொன்னபடியே கேட்பேன், I will obey you strictly.*

(*கேட்பேன், I will hear.* To hear is to obey, in Tamil.)

(21.) *அதுகாரியம்* (for *அந்தக் காரியம்) that affair.*

(Here *அது* and *காரியம்* are put in apposition.)

(22.) *அவனுக்கு ஏக்கம் பிடித்து விசனத்துடனே படுத்துக் கொண்டான், deep distress seized him and he lay down with grief.*

(Both *பிடி*, 56. I. and *எடு*, 56. I. are used idiomatically. *எனக்குப் பசி எடுக்கிறது, I am hungry.—)*

(23.) *அதற்கவர்கள் சொன்னது: எங்களுக்குத் தெரியாது.*
(To this that which they said is: We don't know.)

They said, we don't know.

(24.) *வலதுகாது, the right ear. இடது காது, the left ear.*

வலதுகை, the right hand. *இடதுகை, the left hand.*	Very commonly	*சோற்றுக்கை, the rice hand.* *பீச்சக்கை, the hand used for baser purposes.*

(25.) *கொழுப் பேறியிருக்கிறது, it is grown fat.*

[*கொழுப்பு ஏறியிருக்கிறது, fat—having ascended—is.*]

காரியம் நடந்தேறி வருகிறது, the affair is prospering.

[*நடந்து ஏறிவருகிறது, going on—ascending—it comes.*]

(26.) *அவனை அழைத்தனுப்பினேன், I sent for him.*

Here the adverb part. *அழைத்து* seems to be used for the infin. *அழைக்க, I sent to call him.*

So கேட்டனுப்பு, send to enquire = கேட்கும்படி அனுப்பு.

(27.) குரு உபதேசித்தானவுடனே.

[உபதேசித்து	ஆன	உடனே.]
77. (b.)	130.	106. (2.)
[*Having taught,*	*was become*	*as soon as.*]

As soon as the Guru had finished teaching.

அவன் பெரியவன் ஆன பிறகு, after he was grow up.

END OF THE LESSONS.

APPENDIX I.

I.—SHORT SENTENCES.

(1.) பொய் நின்று மெய்யை வெல்லுமா?
70.77. 18. 70.72.46.
will falsehood stand and conquer truth?

(2.) வரவுக்குத் தக்க* செலவு செய்ய வேண்டும்.
190. 117. 190. 41. 39.
To the income suited expenditure make (one) must.

[*தகு 68. 157. தக்க past. rel. part. (தக்கோன், தக்க)]

(3.) *Gratitude and ingratitude.*

நல்ல குணத்தை (2) உடையவர் ஆகிய ஒருவருக்கு [ச்] (1) செய்த
18. e. 185. 130. 172. 74.

உபகாரமானது கருங்கல்லின்மேல் எழுத [ப்] பட்ட எழுத்து [ப்] போல
151. 184. 22. 251. 92. 190. 227.

நெடுங் காலம் விளங்கும்; (3) ஒழிந்த (4) அன்பில்லாத மனமுடைய
131. 233. 72. 269. 74. 121. 183. 50. 185.

ஒருவருக்கு [ச்] செய்த உபகாரம், நீர்மேல் எழுத [ப்] பட்ட
172. 251.

எழுத்து [ப்] போலச், செய்த அப்போது தானே அழியும். ஆதலால்,
227. 25. 108. (c.) 72. 269. 148.

எந்த [க்] காலத்திலும் நல்லோர்க்கே உபகாரஞ் செயல் வேண்டும்.
126. 184. 193. 50. 148. 39.

Notes. (1.) செய்த for செய்யப்பட்ட = *which has been done* or *conferred.* Or an ellipsis of ஒருவன் = *which one has conferred. The Tamil avoids the use of the passive voice as much as possible.*

(2.) Forms like உடையவர், &c., are called verbs by the Tamilians (185.) and sometimes govern cases accordingly. To an English Grammarian it seems more natural to consider உடை to be a preposition *(belonging to)*, governing the objective case, and to which அவர் is added.

(3.) ஒழிந்த qualifies ஒருவருக்கு, so does மனமுடைய. அன்பில்லாத qualifies மனம். In such cases it is difficult to say whether a word like ஒழிந்த belongs to அன்பு or reaches over to மனம். The sense must determine the question. ஒழிந்த ஒருவருக்கு = *to ones who remain, the rest.*

(4.) அன்பு + இல்லாத = அன்பில்லாத. App. xi. (iv.)

Translation.

The benefit done to those possessed of a good disposition, like the inscription inscribed upon black stone (Granite), [for a] long time will appear; the benefit done to the rest, possessed-of-minds—destitute-of-love, like the inscription inscribed upon water, even then when it is done, will perish. Therefore, in every time, to the good especially, the doing of benefits is necessary. [Comp. 229.]

(4.) *The Turkey fancying itself a peacock.*

காட்டில் இருக்கிற மயிலானது தன்னுடைய அழகுள்ள
18. 19. 21. 269. 151. (a.) 108. 133.

கலாபத்தை விரித்து ஆட, அதைக் கண்டு, அங்கிருந்த
18. e. 64. 77. 169. 10. 70. உ elided.

வான் கோழியானது தானும் அம்மயிலாக நினைத்துத், தன்னுடைய
131. 151. 108. 7. 25. 136. 64. 108.

அழகில்லாத சிறகை விரித்து ஆடியது போலுமே, (1) இலக்கண
121. 87. (b.) 227.

இலக்கியங்களைக் கற்றவர் பிழையற்ற கவியைப் பிரசங்கிக்க,
70. 87. 90. 169.

அதைக்கண்டு அவைகளைக் கற்றறியாதவன் தான் கற்ற பிழையாகிய
77. உ elided 121. (4) 130.

கவியைத் தன்னையுங் கற்றவனாக எண்ணிப் பிரசங்கிக்கிறது.
18. b. 77. 87.

(1.) For இலக்கணத்தையும் இலக்கியத்தையும், the two words formed into a compound and the pluralizing particle added to the last. III. Gram. 156.

The subject is பிரசங்கிக்கிறது. The final verb is போலும்.

This is a good though somewhat difficult exercise in Tamil construction.

(5.) *Noscitur a sociis.*

நல்ல தாமரைப் பூவை உடைய குளத்திலே நல்ல அன்னப்பறவை
184. 131. 18. 185. 18. (e.) 131. 190.

சேர்வது போலக் கற்றறிந்தவரே கற்றறிந்தவரை இச்சித்துச் சேர்வார்.
88. 227. 193. 64. 72.

காக்கை சுடுகாட்டிலே கிடக்கிற பிணத்தை இச்சிக்கும், அதுபோலக்
270. (5.) 74. 18. (e.) 72.

கற்றறியாத மூடர் மூடரையே கொண்டாடுவார்.
255.

(6.) *Mens conscia Recti.*

தான் நஞ்சத்தை உடையதாயிருக்கிறதை அறிந்து நாகபாம்பு
108. 18. (e.) 185. 137. 87. 131.

ஒருவருங் காணாத இடத்திலே அஞ்சி ஒளித்துக் கொண்டு இருக்கும்.
172. 7. 121. (4.) 251. 62. 77. 64. 106. (4.) 72.

தன்னிடத்திலே நஞ்சம் இல்லாத நீர்ப்பாம்பு எல்லாருங் காணும்
108. 131. 127. 74.

இடத்திலே இருக்கும். அவை போல, மனத்தினுள்ளே வஞ்சனையை
App. xii. (II.) 22. 251. 23. 18. a.

உடையவர் தம்மைத் தாமே மறைப்பார். வஞ்சனையில்லாத
185. 64.

மனத்தையுடையவர் அப்படித் தம்மை மறைக்க மாட்டார்.
25. 117.

(7.) *The king and the learned man.*

அரசனையுங் குற்றந் தீரக் கற்ற புலவனையும் ஆராய்ந்து
18. 7. App. xi. [So that every fault should REMOVE. 170.] 70. 57.

பார்த்தால் அரசனைப் பார்க்கிலும் புலவனே சிறப்பையுடையவன்
95. 196.

ஆவான்.
58.

அது எப்படி எனில்,
98.

அரசனுக்கு அவனுடைய தேசத்தில் அல்லாமல் அன்னிய
202.

தேசங்களிலே மரியாதை இல்லை; புலவனுக்கு அவன் போன
43. 6. 58.

தேச்ங்களில் எல்லாம் மரியாதை உண்டாகும்.
127. 43. 72.

II.—SIMPLE READING LESSONS, WITH GRAMMATICAL REFERENCES.

1. *The Lord's Prayer.*

கர்த்தருடைய செபம்.

பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே!

272. 29. (e.) 74. 60. II. 37. 21. 18. (a.)

உம்முடைய நாமம் பரிசுத்தப் படுவதாக; (1)

37. App. xii. 11. (b.) 161. 140. (b.)

உம்முடைய இராச்சியம் வருவதாக;

70. 140. (b.)

உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப் படுகிறது போலப்

18. (e.) 21. 23. 168. 92. 87. 227.

பூமியிலேயுஞ் செய்யப் படுவதாக;

18. 21. 23. 126. 92. 140. (b.)
Intro. § ii. (IV.)

அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்;

166. 274. (12) 128. 133. 37. 18. (e.) 166. 70. 27.

எங்களுக்கு விரோதமாய் [க்] குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள்

37. 40. 50. 51. 87. 21. 37.

மன்னிக்கிறது போல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்;

64 87 227. 37. 29. 37. 27. 64. 65.

எங்களை [ச்] சோதனைக்கு உட் பிரவேசிக்க [ப்] பண்ணாமல்,

4. 21. 242. 251. 41. 121. (2.)

தீமையினின்று எங்களை இரட்சித்து [க்] கொள்ளும்.

64. 21. 37. 64. 77. (b) 106. (4)

இராச்சியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும்

7. 7. 7. 166. 126.

உம்முடையவைகளே! ஆமென்.

184. 185. 6. 108.

(1.) This form is not quite idiomatic. It is, in fact, coined, and properly so, for the purpose. Lit. it would be *பரிசுத்தப் படுத்தப் படுவதாக.*

2. *The Creed.*

விசுவாசப் பிரமாணம். [The law of faith.]
131.

வானத்தையும் பூமியையும் படைத்தவராகிய சருவ வல்லமையுள்ள
18. (e.) 7. 18. (b.) 7. 87. 130. 131. 134. 133.

பிதாவாயிருக்கிற பராபரனை விசுவாசிக்கிறேன்.
18. (a.) 137. 87. 3. 34.

அவருடைய ஒரே குமாரனாயிருக்கிற நம்முடைய நாதர்
31. (e.) App. xii. 172. 23. 137. 87. 37. 11. (c.) 29. 31. (e.)

இயேசுக் கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த
Intro. § ii. (xi.) 18. (a.) 7. [Parad. of Pron. App. xii.] 131.

ஆவியினாலே கன்னி மரியாளுடைய கருப்பத்தில் உற்பவித்துப்
21. 22. 23. 130. 21. 18. 21. 77. (b.)

பிறந்து, பொந்தியு பிலாத்தின் கீழ்ப் பாடுபட்டுச், சிலுவையில்
77. (b.) 21. 107. 262. 50. 77. (b.) 21.

அறையுண்டு, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளங்களில்
265. 77. (b.) 77. (b.) 50. 92. 21. 29.

இறங்கினார் என்றும், மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து
71. 83. 175. 233. 87. 245. App. xii. Note.

எழுந்தருளிப், பரமண்டலத்துக்கு ஏறிச், சருவ வல்லமையுள்ள
77. (b.) 77. (a) 264. 18. 21. 77. (a.)

பிதாவாகிய பராபரனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார்
130. 21. 21. 23. 77. (b.) 79.

என்றும், அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும்
83. 25. 21. 185. 7. 87. 7.

நியாயந் தீர்க்க வருவார் என்றும் விசுவாசிக்கிறேன்.
50. 41. 70. 72. 83.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன், பொதுவாயிருக்கிற பரிசுத்த
40. 87.

சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவ மன்னிப்புஞ்,
7. 180. 29. 7. 51.

சரீரம் உயிர்த்தெழுதலும், நித்திய சீவனும், உண்டென்று விசு
50. 77. (b.) 148. 7. 131. 7. 43. 133. 82.

வாசிக்கிறேன். ஆமன்.

3. *The three fishes.*

ஒரு பெரிய குளத்தில் "வருமுன் காப்பவன்" என்றும்,
8. 18. (e) 85. [ம் elided.] 87. 83.

"வருங்காற் காப்பவன்" என்றும், "வந்த பின் காப்பவன்"
= காலத்தில். 85.

என்றும், மூன்று மீன்கள் அநேக நாளாய் வாழ்ந்து
172. 29. 40 = for many days. 60.
233. (7.)

கொண்டிருக்கு' நாளில் ஒரு நாள் வலைக்காரர் வந்து, இதிலே
106. (4.) 74. 8. 233. (6.) 181. 25. 23.

தண்ணீர் கொஞ்சமாயிருக்கிறதாகையா னாளை வந்து இதில் இருக்கிற
137. [த + ஆ] 145. [ல் + ந] 74.

மீன்களை எல்லாம் பிடிப்போம்" என்று பேசிக் கொண்டதை
127. (f.) 64. 106. (4.)

"வருமுன் காப்பவன்" கேட்டுத், தன் சினேகிதரிடத்திற் போய்
R. கேள். 70. 108. 29. (b.) 78.

நாம் இவ்விடம் விட்டுச் சீக்கிரமாகப் புறப்பட வேண்டும், இனி
25. 254. 136. 262.

இங்கே ஒரு நிமிஷ நேரமும் இருக்கல் ஆகாது என, இதைக்
25. 131. 148. 117. 82.

கேட்டு, "வருங்காற் காப்பவன்" சொல்லுகிறது: நமக்கு விபத்து
70. 34.

வரும் போது பார்த்துக் கொள்ளுவோம், காரியம் நேரிடும் போது
106. (2.) 106. (4.) 263. 106. (2.)

அதற்குத் தக்கதாகப் புத்தி உண்டாகும் என, பிறகு "வந்த
App. xii (II.) 157. 225.

பின் காப்பவன்:" தன்னிடத்தை விட்டு விடுகிறது தான்
254. 108. (c.)

மூர்க்கத்தனம். ஏனென்றால், எது வரத் தக்கதோ அது வரவே வரும்.
214. 25. 70. 157. 46. 217. 168.

யாதொன்று வரத் தகாததோ, அதை நாம் வருந்தி அழைத்தாலும்
47. 172. 121. (2) 62. 100.

வராது. ஆதலால், நான் வர மாட்டேன் என்று சொல்லி அந்தக்
110. 148. 117.

குளத்திலேயே இருந்தது. பிறகு, "வருமுன் காப்பவன்" வேறு
23. 193.

இடத்திற் போய் விட்டது. மறுநாள் உதயத்திற் செம்படவர் வந்து,
254.

வலையெறிந்து மீன்களைப் பிடித்தார்கள்; அதில் "வருங்காற்
50.

காப்பவன்" அகப்பட்டுச் செத்தாற் போற் பாசாங்கு பண்ணிக்
161. 58. 227.

கொண்டிருந்தது. அதைப் பார்த்து, இது செத்தது என்று
106. (4.) 58.

எண்ணிக்கொண்டு, செம்படவன் அதைக் கரைமேற் போட்டு
251.

வைத்தான். இதற்குள்ளே அது அவன் கண்ணுக்குத் தப்பித்
261. 251. App. xii. (II). *To this within=in the meanwhile.* Ellipsis of sign of case. 242.

தண்ணீரிற் புகுந்து, ஒளித்துக் கொண்டது. பிறகு "வந்தபின்
56. (II.)

காப்பவன்" வலைக்குள் அகப்பட்டு, இப்போது என்ன செய்யலாம்
251. 103.

என்று, அங்கும் இங்கும் ஓட அதைச் செம்படவன் கண்டு, தடியால்
169.

அடித்துக் கொன்றான். மற்றிரண்டுஞ் சுகம் அடைந்தன.
70. [கொல்.] மற்று + இரு. 172. 126. 70.*

ஆகையால், எதையும் ஆலோசித்துச் செய்ய வேண்டும்.
145. 126. 163. 64.

4. *The merchant resolves to engage in business again.*

தென்னாட்டிலே மகிழாரூப்பியம் என்னும் பட்டணத்தில்
[ன் + ந. App. xi.] S. MAHILÂ=a woman, RÛPYA=beautiful. 132.

வர்த்தமானன் என்றொரு வர்த்தகன் இருந்தான். அவனுக்கு வெகு
[S. VARDDHA-MÁNA=thriving.] 130. 172. 60. (II.) 242. (2.)

பணம் இருந்தும், இன்னஞ் சம்பாதிக்க வேண்டும் என்கிற ஆசையி
100. (I.) 124. 125. 39. 84.

னால் ஆலோசிக்கல் ஆனான். எப்படி என்றால், யாதொன்று
148. 268. 58. 98. 203.

சம்பாதிப்பது அருமையோ அதைச் சம்பாதிக்க வேண்டும்;
88.
[Is any thing difficult of acquisition, that (one) must acquire.]

சம்பாதித்ததைக் காப்பாற்ற வேண்டும்; காப்பாற்றினதை விர்த்தி
[nom. தான் understood 108.] 87. 87. [விருத்தி.]

பண்ண வேண்டும். விர்த்தி பண்ணினதைத் தானும் அனுபவித்து
165. 108. 7. 77.

உத்தமபாத்திரத்திற் செலவழிக்க வேண்டும். ஏனென்றால், காப்பாற்றாத
131. 196. (2.) 190. a. 98. 121. (4.)

திரவியம் நாசம் ஆகும்; விர்த்தி பண்ணாதது குறையும்; தானும்
165. 72. 121. (4) 72.

அநுபவித்துச் சத்பாத்திரத்திற் செலவழியாதது வீண் ஆகும் எனச்
77. 121. (5) 72.* 82.

சாஸ்திரம் இருக்கிறதினாலும்; மேலும், இன்பமும், புண்ணியமும்,
and by there being = *Both because there is.* 87. 126.

கீர்த்தியும், மனிதர்க்குள்ளே பெருமையும், உறவும், நினைத்தது
[= மனிதருக்குள்ளே. 242. (II).] 87. 50.

முடித்தலும், யாருக் குண்டு? திரளாகப் பணங் குவித்தவர்களுக்கே
148. 133. 136. 50. 88. 23. 108.

உண்டு. இல்லாதவர்கள் உலகத்திலே நடைப்பிணம் ஆவார்கள்
121. (5.) [a walking corpse. 131.] 58.

ஆகையினாலும்; மேன்மேலுஞ் சம்பாதிப்பதே யோக்கியம் என்று
145. 88. 23. 6.

ஆலோசித்துக்கொண்டு, தன்னிடத்தில் இருக்கிற சரக்குகளை வண்டியில்
77. 106. (4.) a. 108. 74.

ஏற்றி, அதிற் "சஞ்சீவகன்," "நந்தகன்" என்னும் பெயரை உடைய
77. [S. The fellow servant.] [*S. The joy causer*] 132. 185.

இரண்டு எருதுகளைப் பூட்டி நடத்திக் கொண்டு தேசாந்தரம் போனான்.
172. 87. 160. 106. (4.) b. 234. 235. 58.

5. *The Sun-rise.*

[This is a specimen of Sanskrit-Tamil. The style is inflated and the idiom not pure.]

அத்தின இராக்காலங் கழிந்து, ஆயிரங் கிரணங்களைப்
25. The night season of that day, 172.

படைத்திருக்கின்ற சூரிய பகவான் கிழக்குத் திசையில் நிற்கின்ற
87. 79. 33. 131. App. ix. 70. 33.

உதயகிரியினிடத்திற் றோற்றிய காட்சியானது எப்படிக்கிருந்ததெனில்:
131. [App. xi. III. (III.) ல் + த = ற்ற] 74. 151. [எப்படிக்கு = எப்படி.] 199. 98.

உலகங்களை அலைத்துத், தீனரை வாட்டிப், பற்பல கொடுமைகளைச்

செய்து, வீறி இருக்கின்ற செயசாலிகள் ஆகிய அவுணர் பூண்டை
181. 13. 131.

வேரறக் களைவதாக வெற்றி வேலாயுதத்தைத் திருக்கரத்திற் கொண்
170. as if it would weed out 131.
87.

டிருக்கும் ஒப்பற்ற பால சுப்பிரமணிய தேவர் "இத்தினம் பிரயாணப்

